Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror www.tamilmirror.lk

SATURDAY, JUNE 25, 2022

சனிக்கிழமை ஜூன் 25, 2022 | ஒளி: 08 கதிர்: 032 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free




## இலங்கையின் மனித உரிமை மீறல்கள், ஊழல்கள் குறித்தும்

# ஐ.எம்.எப் கவனம் செலுத்த வேண்டும்

### சர்வதேச நிபுணர்கள் மற்றும் பிரதிநிதிகள் எடுத்துரைப்பு

ஆர்.யசி

இலங்கையின் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் விதமாக சர்வதேச நாணய நிதியம், இலங்கையில் முக்கிய கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், இலங்கையின் கடந்தகால ஊழல் போக்குகள், மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட விடயங்களை சர்வதேச நாணய நிதியம் கவனத்தில் கொள்ள வேண்டும் என சர்வதேச நிபுணர்கள் மற்றும் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இலங்கையின் ஊழல் செயற்பாடுகள் குறித்தும், மனித உரிமை மீறல்கள் குறித்தும் ஐ.எம்.எப் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து பிரிட்டனின் பொதுநலவாய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் விக்கிபோர்ட் சுட்டிக்காட்டியுள்ளதானது: இலங்கையின் பொருளாதார நிலைமைகள் குறித்து ஐ.எம். எப் அதன் கொள்கைகள் தொடர்பில் நிபந்தனைகளை விதிப்பது குறித்து கூடிய கவனம் செலுத்தியுள்ள போதிலும், அரசியல் மற்றும் மனித உரிமை தொடர்பான நிபந்தனைகளை விதிப்பதற்கான ஏற்பாடுகள் எதையும் முன்னெடுக்கவில்லை என்பதே வெளிப்படுகிறது. இலங்கையின் கடன் பிரச்சினைக்கு தீர்வொன்றை காண்பதில் சகலரும் கவனம் செலுத்த வேண்டும். ஆனால், மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்துவதும், பொறுப்புக்கூறல் விடயங்களில் உண்மையாக நடந்துகொள்வதும் அவசியம். அதனை தொடர்ச்சியாக நாம் வலியுறுத்துவோம்.

இலங்கை தற்போது மோசமான பொருளாதார நிலைமைகளுக்கு முகங்கொடுக்கின்ற போதிலும் அதனை காரணம் காட்டி, மனித உரிமை செயற்பாடுகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்களில் இருந்து கவனத்தை திசைதிருப்பக்கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்ற தற்போதைய சூழலில், நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள மக்களை மீட்பதற்குப் பதிலாக, ஊழல் மிகுந்த அரசியல்வாதிகளை மீட்டெடுக்கும் அபாயம் உள்ளதாக பிரிட்டனின் இராஜதந்திரி மார்க் மெலோச் பிரவுன் சர்வதேச நாணய நிதியத்திற்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

---

## விவசாய திணைக்கள ஊழியர்களின்

# விடுமுறைகள் இரத்து



யூரியா உரத்தை வினைத்திறனாக விநியோகிக்க வசதியாக, விவசாய அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களின் விடுமுறையும் ஜூலை 6 ஆம் திகதி முதல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

---

# 3,000 பேக்கரிகள் மூடப்படும் நிலை



பேக்கரி உணவுகளை தயாரிக்கும் மூலப்பொருட்களின் விலை 300 சதவீதத்தால் அதிகரித்துள்ள காரணத்தால் பேக்கரி உரிமையாளர்கள் அதிக சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாகவும், 50 கிலோ கிராம் கோதுமை மா பொதியின் விலை 1,000 ரூபாவால் அதிகரித்துள்ளதாகவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

---




## மூன்று பில்லியன் இலங்கை ரூபாய் பெறுமதியான

# தமிழக அரசின் நிவாரணம் கையளிப்பு

தமிழக அரசால் வழங்கப்படும் 40,000 மெட்ரிக் தொன் அரிசி, 500 மெட்ரிக் தொன் பால்மா மற்றும் மருந்துப்பொருட்கள் உள்ளடங்கிய பாரிய நிவாரணத்தின் இரண்டாம் கட்டமாக 03 பில்லியன் இலங்கை ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய 14,700 மெட்ரிக் தொன் அரிசி,

தொடர்ச்சி P2

---



## நெருக்கடி நிலைமையிலும்

# இலங்கைக்கு தொடர்ச்சியாக ஆதரவளிப்போம்

### ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள தற்போதைய சூழ்நிலையில், இந்தக் கடினமான சவால் மிகுந்த நேரத்தில் இலங்கைக்கு தொடர்ச்சியாக ஆதரவளிப்போம்

தொடர்ச்சி P2

---

# ஜூனில் 8,179 டெங்கு நோயாளர்கள்



ஜூன் மாதத்தில் மாத்திரம் 8,179 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனத் தெரிவித்த தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் சுதத் சமரவீர, ஒரு மாதத்தில் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவான சந்தர்ப்பம் இதுவாகும் எனத் தெரிவித்தார்.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில், 32,385 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார். கடந்த வாரத்தில் மேல் மாகாணத்தில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

---

# யாழில் குதிரைவண்டி பயணம் ஆரம்பம்


எம்.றொசாந்த்



எரிபொருள் தட்டுப்பாட்டால் குதிரை வண்டியில் தனது பயணத்தை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஒருவர் ஆரம்பித்துள்ளார். தனது வாகனத்துக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகள் காணப்படுவதன் காரணமாக குதிரை வண்டியில், தனது வழமையான செயற்பாடுகளை மேற்கொள்வதாகவும் அருட்தந்தை தெரிவித்தார்.

---

# ஆஸி. செல்லமுயன்ற 35 பேர் கைது



கடல் வழியாக, சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லமுயன்ற மேலும் 35 பேர் கடற்படையினரால் நேற்று முன்தினம் (23) கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல நாள் மீன்பிடி படகின் ஊடாகவே, அவர்கள் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

---

# கிரெடிட் கார்ட்களுக்கான வட்டிவீதம் அதிகரிப்பு




இலங்கையில் உள்ள பல வர்த்தக வங்கிகள், கடன் அட்டைகளுக்கு (கிரெடிட் கார்ட் ) அறவிடப்படும் வட்டி விகிதத்தை உயர்த்தியுள்ளமை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரியவந்துள்ளது. இதன்படி சில வர்த்தக வங்கிகள் தமது கிரெடிட் கார்ட்டுக்கான வட்டியை 30 சதவீதமாக அறிவித்துள்ளன.

தொடர்ச்சி P2

---

## நெருக்கடியை சமாளிக்க

# நட்பு நாடுகளுடன் நேரடி பேச்சு

### இந்தியாவின் ஒத்துழைப்புக்கு நன்றி




இலங்கை முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில், இந்தியா வழங்கும் ஒத்துழைப்புகளுக்கு நன்றிகளை தெரிவிப்பதுடன், நெருங்கிய நட்பு நாடு என்ற ரீதியில் இந்தியாவின்

தொடர்ச்சி P2

---

# ஈழ அகதியொருவர் தீக்குளிக்க முயற்சி



தம்மை விடுதலை செய்யக்கோரி திருச்சி சிறப்பு முகாமில் ஈழ அகதிகள் 34 நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று (24) உமா ரமணன் என்ற அகதி, தீக்குளித்து தற்கொலைக்கு முயன்றிருக்கிறார். எனினும் சக அகதிகள் மூலமாக அவர் காப்பாற்றப்பட்டிருக்கிறார்

---

# பாற்சோறு உண்டு மகிழ்கையில் நாங்கள் போராடியவர்கள்

### மத-அரசியல்-சிவில் பிரதிநிதிகள் கூட்டத்தில் மனோ கணேசன்



காலிமுகத் திடல் போராட்டத்தை நாம் ஆதரிக்கிறோம். ஆனால், போராட்டத்தை நாம் அங்கிருந்து கற்றோம் என நீங்கள் நினைக்க கூடாது. நீங்கள் பாற்சோறு உண்டு கொண்டாடிய வேளையிலும் போராடியவர்கள் நாங்கள். நாம் மதவாதத்தால், இனவாதத்தால், அரச பயங்கரவாதத்தால் ஒடுக்கப்பட்டுவரும் ஓரினம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி நினைவூட்டினார்.

இந்த அநீதிகளுக்கு எதிராக நாம், இன்று, நேற்றல்ல, பல்லாண்டுகளாக போராடி வருகிறோம். நாம் எப்போதும் ஜனநாயக போராளிகள்தான். அரசியலில் இருந்து மதம் அகற்றப்பட வேண்டும். இலங்கை ஒரு மதசார்பற்ற நாடாக அறிவிக்கப்பட வேண்டும். அதுவரை எம் ஜனநாயக போராட்டம் தொடரும் என்றார்.

கொழும்பு, பத்தரமுல்லை 'இம்பீரியல் மொனார்ச்' விடுதியில் நேற்று (24) நடைபெற்ற 'சீர்திருத்தத்துக்கான கூட்டு' என்ற சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ஓமல்பே சோபித தேரர் உட்பட மதத்தலைவர்கள்,

தொடர்ச்சி P2

---

# லங்கம வழக்கில்; வெல்கம விடுவிப்பு

போக்குவரத்து அமைச்சராக பதவியில் இருந்தபோது, இலங்கை போக்குவரத்து சபைக்கு (லங்கம) பாரிய நட்டத்தை ஏற்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான குமார் வெல்கம, அந்த வழக்கில் இருந்து நேற்று (24) விடுவிக்கப்பட்டார்.

தான் அமைச்சராக பதவிவகித்த போது,

தொடர்ச்சி P2

# ஐ.எம்.எப் கவனம் செலுத்த வேண்டும்

உதவிகளை தன்வசப்படுத்தும் வரலாறுகள் இலங்கை கொண்டுள்ளது என்பதையும் இன்றைய நெருக்கடிக்கு காரணம் என்ன என்பதையும் சர்வதேச நாணய நிதியம் கண்டிப்பாக தெரிந்துள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோல் பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸை சந்தித்துள்ள சர்வதேச பிரதிநிதிகள் பலர் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகளை ஈட்டுவதில் வெறுமனே சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார வேலைத்திட்டங்களை தாண்டிய பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை கையாள வேண்டும் என வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## விடுமுறைகள் இரத்து

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவின் பணிப்புரைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டிற்கு வரும் 65,000 மெற்றிக் தொன் யூரியாவை எதிர்வரும் ஜுலை 7ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை கமநல நிலையங்களுக்கு கொண்டு சென்று, இறுதியில் விவசாயிகளிடம் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே விவசாய அமைச்சு, கமநல சேவைகள் திணைக்களம், தேசிய உர செயலகம், இலங்கை உர நிறுவனம் மற்றும் வர்த்தக உர நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களின் விடுமுறைகள் இக்காலப்பகுதியில் இரத்து செய்யப்படவுள்ளன.

## ஆளி. செல்லமுயன்ற...

பாணந்துறை பிரதேசத்திலுக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் வைத்தே இவர்களை கைது செய்யப்பட்டள்ளனார். அதில் ஆண்கள் 25 பேர், பெண்கள் நால்வர் மற்றும் சிறுவர்கள் அறுவரும் அடங்குகின்றனர்.

ஆட்கடத்தல் வர்த்தகத்துடன் தொடர்புடைய ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 6 வயதுக்கும் 56 வயதுக்கும் இடைப்பட்ட இவர்கள், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, நீர்கொழும்பு, கற்பிட்டி மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

> **6 வயதுக்கும் 56 வயதுக்கும் இடைப்பட்ட இவர்கள், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, நீர்கொழும்பு, கற்பிட்டி மற்றும் நுவரெலியா..**

## நட்பு நாடுகளுடன் நேரடி பேச்சு

ஒத்துழைப்புகள் இலங்கைக்கு அவசியம் என வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தியாவின் ஒத்துழைப்புக்களை தொடர்ந்தும் பெற்றுத்தர தயாராக இருப்பதாக இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ருவாண்டாவில் நடைபெற்று வரும் பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்துகொண்டுள்ள இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் அமைச்சர் ஜி.எல். பீரிஸுடன் சந்திப்பொன்றை முன்னெடுத்திருந்தார். பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்துரையாடப்படும் விடயங்களுக்கு அப்பால் இலங்கையின் நெருக்கடி நிலைமைகள் குறித்தும் பொருளாதார மீட்சிக்கான வேலைத்திட்டங்கள் குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையிடப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் இருந்து பெற்றுவரும் நிவாரண மற்றும் கடன் உதவி வேலைத்திட்டங்கள் குறித்தும், தொடர்ச்சியாக இந்தியாவின் ஒத்துழைப்பு நகர்வுகள் குறித்தும் இந்தபோது முக்கியத்துவம் கொடுத்து கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த 23 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய தூதுக்குழுவின் ஆலோசனைக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும், இந்தியா தொடர்ச்சியாக இலங்கைக்கான ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொடுக்கும் எனவும் பீரிஸிடம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துவரும் பேச்சுவார்த்தைகளி ல்முன்னேற்றம் உள்ளதாகவும், விரைவில் ஐ.எம்.எப்பின் நிதி உதவிகள் கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ள பீரிஸ், நட்பு நாடுகளுடன் நேரடியாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து கடன் மீள் கட்டமைப்பு குறித்தும் பேசவேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## லங்கம வழக்கில்;...

இலங்கை போக்குவரத்து சபைக்கு பிரதி தலைவர் பதவிநிலையை உருவாக்கி, அரசாங்கத்துக்கு 33 இலட்சம் ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தினார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மீண்டும் வழக்கை தாக்கல் செய்வதற்கான நிபந்தனையுடன் இந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும் சந்தேகநபரை இந்த வழக்கில் இருந்து விடுவிக்குமாறும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தது.

அந்த கோரிக்கையை கவனத்தில் எடுத்த கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க, வழக்கின் பிரதிவாதியான முன்னாள் அமைச்சர் குமார் வெல்கமவை நேற்று (24) விடுவித்தார்.

## தமிழக அரசின்...

250 மெட்ரிக்தொன் பால்மா மற்றும் 38 மெட்ரிக்தொன் மருந்துப்பொருட்கள் அடங்கிய மனிதாபிமான உதவிப்பொருட் தொகுதியினை நேற்று இலங்கை பிரதிநிதிகள் பெற்றுக்கொண்டனர். இந்திய மக்களால் வழங்கப்பட்ட 14,700 மெட்ரிக்தொன் அரிசி, 250 மெட்ரிக்தொன் பால்மா மற்றும் 38 மெட்ரிக்தொன் மருந்துப்பொருட்கள் அடங்கிய மனிதாபிமான உதவிப்பொருட் தொகுதியினை, உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்ணான்டோ, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், வி.இராதாகிருஷ்ணன், எம். உதயகுமார், அங்கஜன் இராமநாதன், செந்தில் தொண்டமான் உள்ளிட்ட ஏனைய பலரும் நேற்று (24) கொழும்பில் பெற்றுக்கொண்டனர். இந்த மனிதாபிமான உதவிப்பொருட் தொகுதி 03 பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையதென்பது குறிப்பிடத்தக்கது.

> **இந்த மனிதாபிமான உதவிப்பொருட் தொகுதி 03 பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையதென்பது குறிப்பிடத்தக்கது**



## 3000 பேக்கரிகள் மூடப்படும்...

இந்த நிலைமை தொடருமானால் பேக்கரி உணவுகளின் விளையும் உயர்வடையும் எனவும், பொதுமக்களையே இது வெகுவாக பாதிக்கும் எனவும் தெரிவித்துள்ள அவர், தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக சுமார் 3000 பேக்கரிகள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கிரெடிட் கார்ட்களுக்கான...

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி, கடன் அட்டைகள் மீதான அதிகபட்ச வட்டி வீத வரம்புகளை நீக்குவதாக அறிவித்ததை அடுத்து, கிரெடிட் கார்ட் வட்டி 18% இலிருந்து 24% ஆக உயர்ந்த. இந்நிலையில் தற்போது வட்டி 30% ஆக உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் சமீபத்திய அறிக்கைகளின்படி, இந்த ஆண்டு (2022) ஏப்ரல் மாத இறுதியில் நாட்டில் செயல்பாட்டில் உள்ள மொத்த கிரெடிட் கார்ட்டுகளின் எண்ணிக்கை 1,973,481 ஆக சுட்டிக்காட்டப்படுகின்றது. ஏப்ரல் (2022) இறுதிக்குள் இந்த கிரெடிட் கார்ட்டுகளுக்கான மொத்தத் தொகை ரூ. 138,192 மில்லியன் ரூபாவாகும் எனவும் கூறப்படுகின்றது.

அதேபோல் இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், நாட்டில் செயல்பாட்டில் உள்ள (தேசிய பாவனா ) கிரெடிட் கார்ட்டுகளின் எண்ணிக்கை 46,286 ஆக உள்ளதாகவும், இந்த கிரெடிட் கார்ட்டுகளின் மொத்தத் நிலுவைத் தொகை 4.9 பில்லியன் எஹூபா எனவும் மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

## பாற்சோறு உண்டு...

நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி எம். பிக்கள் கலந்துக்கொண்ட கலந்துரையாடலில் உரையாற்றிய மனோ எம்பி மேலும் கூறியதாவது;


225 பேர் கொண்ட பாராளுமன்றம் என்ற சொற்பதம் இங்கே ஏற்பாட்டாளர்களினால் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. அந்த கும்பலில் எங்களை போடாதீர்கள். இந்த கோட்டாபய அரசாங்கத்தை நாங்கள் கொண்டு வரவில்லை. நாம் எப்போதும் இந்த ராஜபக்ஷர்களை எதிர்த்தே வந்துள்ளோம். நாங்கள் ஒடுக்கப்பட்ட இனத்தின் பிரதிநிதிகள். நீங்கள் சொல்லும் அந்த 225 பேர் வேறெங்கோ இருக்கிறார்களோ எனக்கு தெரியவில்லை. நான் அந்த கும்பலில் இல்லை என்பது எனக்கு தெரியும் என்றார். நான் மக்களுடனேயே இருக்கிறேன்.

நான் கட்சி மாறி சோரம்போன அரசியல்வாதி இல்லை. காலிமுக திடல் போராட்டத்தை நாம் கொள்கை ரீதியாக ஆதரிக்கிறோம். “கோட்டா கோஹோம்” என்ற கோஷத்தை நாம் ஆதரிக்கிறோம். ஆனால், அதற்காக இங்குள்ள பலரை போல நாங்களும், “கோட்டா கோ ஹோம்” என்ற கோஷத்தை, காலிமுகத்திடலில் இருந்தே கற்றோம் என எண்ண வேண்டாம் என்றார்.

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை

## சரக்குக் கட்டணமின்றி ஏற்றிச்செல்ல தயார்

### ரீலங்கா ஏயார்லைன்ஸ் நிறுவனம் அறிவிப்பு



இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில், சர்வதேச அளவில் நன்கொடையாக வழங்கப்படும் நாட்டிற்கு தேவையான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை சரக்குக் கட்டணமின்றி விமானத்தில் ஏற்றிச் செல்வதற்கான பொறுப்பை தாம் ஏற்பதாக ஸ்ரீலங்கா ஏயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள மருத்துவமனைகளுக்கு வெளிநாட்டில் இருந்து நன்கொடையாக வழங்கப்படும் மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களை இலவசமாக விமானம் மூலம் அனுப்பும் பணியை தாம் ஏற்பதன் மூலமாக, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவன சமூகப் பொறுப்புப் பிரிவு, நாட்டின் நீண்டகால மருந்துப் பற்றாக்குறையைச் சமாளிப்பதில் சிக்கல் உள்ள மருத்துவமனைகளுக்கும், உயிர்காக்கும் மருந்துகளைச் சார்ந்திருக்கும் நோயாளிகளுக்கும் விரைவாக உதவமுடியும் என நம்புவதாகவும் அறிவித்துள்ளது.

## இலங்கைக்கு தொடர்ச்சியாக ஆதரவளிப்போம்

எனவும் ஐரோப்பிய நாடுகளை இலங்கையின் நண்பர்களாக கருதுங்கள் எனவும் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவிடம் தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான எதிர்காலத் திட்டங்கள் குறித்த உறுதியான செய்தியாக,சர்வதேச சமூகம் இலங்கைக்கு உதவுவதற்கு நிச்சயமாக வழி வகுக்கும் எனவும் தூதுக்குழுவினர் சுட்டிக்காட்டினர்.

> **நாட்டின் மக்கள்தொகையில் அண்ணளவாக 90% மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள். அவர்களில் 75% மக்கள் விவசாயத்தை நம்பியுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உரம் மற்றும் எரிபொருளை வழங்குவதன் மூலம் உணவு விநியோகம் தொடர்பான பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்**

ஜனாதிபதி மாளிகையில் நேற்று (24) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த போது ஐரோப்பிய தூதுவர்கள் இந்த கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

நாட்டைன் உணவு நெருக்கடி குறித்து கவனம் செலுத்தியுள்ள நிலையில், நாட்டின் மக்கள்தொகையில் அண்ணளவாக 90% மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள். அவர்களில் 75% மக்கள் விவசாயத்தை நம்பியுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உரம் மற்றும் எரிபொருளை வழங்குவதன் மூலம் உணவு விநியோகம் தொடர்பான பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என ஜனாதிபதி தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

அத்துடன், விவசாயத்தில் ஆர்வம் உள்ளவர்களுக்கு விவசாயம் செய்யப்படாத அரச காணிகளை வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், யுத்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நிலைமையை கருத்திற்கொண்டு நிரந்தர தீர்வை வழங்குவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகள் மற்றும் கட்சி பேதமின்றி தூதுவர்களின் தலையீடுகள் இன்றி சட்டத்தை அமுல்படுத்துவதில் பேணப்பட்ட நியாயமான செயற்பாடுகள் குறித்தும் ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

## கிங்ஸ்வூட்டை வீழ்த்தியது சென். ஜோசப்

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரின் ஹவலொக் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் (23) ஆரம்பப் போட்டியில் கிங்ஸ்வூட் கல்லூரியை சென். ஜோசப் கல்லூரி வீழ்த்தியது.

சென். ஜோசப் கல்லூரி ஆறு ட்ரைகளைப் பெற்றதோடு, அவற்றில் இரண்டை கொன்வேர்ஷனாக மாற்றியிருந்தது. கிங்ஸ்வூட் சார்பாக ஒரு பெனால்டியொன்றின் மூலம் மூன்று புள்ளிகள் பெறப்பட்டிருந்தது.

இப்போட்டியின் நாயகனாக சென். ஜோசப் கல்லூரியின் அணித்தலைவரான டெரான் கருணாநாயக்க தெரிவானார்.



Dialog SCHOOLS RUGBY

## அமைச்சரானார் தம்மிக்க பெரேரா



முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக தம்மிக்க பெரேரா நேற்று (24) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ முன்னிலையில்பதவிப் பிரமாணம் செய்துக் கொண்டுள்ளார். தம்மிக்க பெரேரா நேற்றைய முன்தினம் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்துக்கொண்டிருந்த நிலையில் நேற்று அமைச்சரானார். முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக பொறுப்பேற்றுள்ள அவர், அடுத்த இரண்டு வர காலத்திற்குள் நாட்டிற்காக முதலீட்டை எவ்வாறு கொண்டுவருவது என்ற வேலைத்திட்டத்தை முன்வைப்பதாக தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## விடுமுறைகள் இரத்து

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவின் பணிப்புரைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டிற்கு வரும் 65,000 மெற்றிக் தொன் யூரியாவை எதிர்வரும் ஜுலை 7ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை கமநல நிலையங்களுக்கு கொண்டு சென்று, இறுதியில் விவசாயிகளிடம் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே விவசாய அமைச்சு, கமநல சேவைகள் திணைக்களம், தேசிய உர செயலகம், இலங்கை உர நிறுவனம் மற்றும் வர்த்தக உர நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களின் விடுமுறைகள் இக்காலப்பகுதியில் இரத்து செய்யப்படவுள்ளன.



# ‘யானைப் பசிக்கு சோளப் பொரிகள்’

## பொறுமையின் எல்லையில் மக்கள்


ரஸீன் ரஸ்மின்
razeenrasmin87@gmail.com






புதுக்கடை ஆரம்பித்து, நட்டப்பட்ட அந்தக் கடை முதலாளி, நட்டத்தில் வீழ்ந்த தன் கடையை, அதிலிருந்து மீட்பதற்கு முயற்சிக்க வேண்டுமே தவிர, மேலும் நட்டமடையும் அளவுக்குப் பொறுப்பின்றி செயற்படக் கூடாது.

அதுபோலதான், இலங்கை அரசாங்கமும் செயற்பட வேண்டும். இந்த நாட்டின் பொருளாதார நெருக்கடி, தலைக்கு மேல் போய்விட்டது. உதவி செய்வார்கள் என்று எதிர்பார்த்த எல்லோருமே, தமது கைகளை விரித்துக்கொண்டு நழுவுகின்றார்கள்.

எனவே, இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருத்து எவ்வாறு மீண்டெழுவது என்பது பற்றியே சிந்திக்க வேண்டுமே தவிர, மேலும் சுமையை அதிகரிப்பதற்கான எந்த ஒரு நடவடிக்கையையும் முன்னெடுக்க கூடாது.

பொருட்களின் விலையை அதிகரிப்பதில் கவனம் செலுத்துகின்ற அரசாங்கம், மாற்றுவழி பற்றிக் கொஞ்சம் கூட சிந்திப்பதாகத் தெரியவில்லை என்பதுதான், மக்களின் ஆதங்கமாகவும் உள்ளது.

வேலைக்குச் செல்ல பெற்றோல் இல்லை; டீசல் இல்லை; மண்ணெண்ணெய் இல்லை. வேலைக்குச் சென்றால்தான் வாழ முடியும். மக்கள், தமது அடிப்படைத் தேவைகளை கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

இரவு, பகல் என்று நாள் கணக்கில் எரிபொருளுக்காக வீதியோரத்தில் பொழுதைக் கழிக்கின்றனர். இன்னும் சிலர், உணவு சமைத்து எடுத்துக் கொண்டு, தமது குடும்பத்தினரையும் அழைத்து வந்து, எரிபொருள் வரிசையில் நிற்பதையும் காண முடிகின்றது.

நிம்மதியான சாப்பாடு இல்லை; தூக்கம் இல்லை; வாழ்க்கையில் சந்தோஷம் இல்லை. வாழும் போது, கொஞ்சமாவது வாழ்க்கையில் நிம்மதி இருக்க வேண்டும். நிம்மதி இல்லாத ஒரு வாழ்க்கை தேவையில்லை; ‘வாழ்வதை விட செத்துப்போய் விடலாம்’ என்று சொல்லுகின்ற அளவுக்கு, மக்களின் மனோநிலை மாறிப் போயிருக்கிறது.

பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக, இந்தியா போன்ற சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளன. இவை, ‘யானைப் பசிக்கு சோளப்பொரி’ போடுவது போல் இருந்தாலும், எமது நாடு ஓர் அரசியல் சூழ்ச்சிக்குள் சிக்கித் தவிக்கும் நிலைதான் காணப்படுகிறது.

வழமை போல ஒருவரை ஒருவர் குற்றம் சொல்லிக்கொண்டு, விரல் நீண்டிக் கொண்டு இருக்கின்றார்களே தவிர, பொருளாதார ரீதியாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட இந்த நாட்டை மீட்டெடுப்பதில் அதிக அக்கறை செலுத்துவதாக தெரியவில்லை. தீர்வை நோக்கி இவர்கள் பயணிப்பதாக தெரியவில்லை.

நாட்டின் பொருளாதாரத்தை ஓரளவுக்காவது நிமிர்த்தி விட முடியும் என்ற நம்பிக்கையில், பிரதமர் பொறுப்பை எடுத்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ரணில் விக்ரமசிங்க கூட, “நிலைமை தலைக்கு மேல் போய்விட்டது” என்று அடிக்கடி கையை விரித்து நிற்கின்றார். “எங்கேயாவது கடனைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தால், அந்த இடங்கள் பற்றித் தெரியப்படுத்துங்கள்” என்று பிரதமர் கூறியுள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மக்கள் இழக்க வேண்டிய எல்லாவற்றையும் இழந்துவிட்டார்கள்; பொறுமையையும் கூட. அதனால்தான் வீதியில் இறங்கி, தமது வாழ்வாதாரத்துக்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

இது ஒருபுறம் இருக்க, பொருளாதார ரீதியாக படுகுழியில் விழுந்திருக்கும் இலங்கையை, அந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு இந்தியா, இலங்கையை முழுமையாகப் பொறுப்பெடுக்க உள்ளதாக இந்திய ஊடகமொன்றை மேற்கோள் காட்டி, இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. இச்செய்தியின் உண்மைத் தன்மை குறித்து பல்வேறு சந்தேகங்கள், கேள்விகள் இருக்கின்றன.


இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில், இந்த திட்டத்துக்கு சமூகவலைத்தளங்கள் ஊடாக, அதிகமானோர் தமது ஆதரவுகளைத் தெரிவித்து உள்ளமையை அவதானிக்க முடிகிறது.

இலங்கை மக்கள், இப்போதுள்ள நெருக்கடிகள், பிரச்சினைகள் என்பவற்றுக்குத் தீர்வாக, பூரண ஆதரவை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவே கருத்துகள் பகிரப்படுகின்றன. இதற்குக் காரணம், அந்தளவுக்கு இலங்கை மக்கள் விரக்தியின் விளிம்பில் இருக்கிறார்கள் என்பதுதான். ஒவ்வொரு மாவட்டத்திலும் எரிபொருள், எரிவாயு விற்பனை நிலையங்களுக்கு முன்பாக இருக்கும் மக்கள் கூட்டத்தையும் அவர்கள் வெளிப்படுத்தும் ஆதங்கத்தையும் கண்கூடாகப் பார்க்க கூடியதாக உள்ளது.

எனவே, இந்த விடயத்தில், மக்கள் அனுபவிக்கும் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் இனியும் காலம் தாழ்த்தாது செயற்பட வேண்டும். ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டுப்பணியாக இதனை முன்னெடுக்க வேண்டும்.

இல்லையெனில், 0.3 வீத வரியை அதிகரித்துவிட்டார்கள் என்ற காரணத்திற்காக 2012ஆம் ஆண்டளவில் ஜப்பானில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் அந்த மக்கள் நடப்பாண்டு அரசுக்கு எதிராக வாக்களித்து, எதிர்த்தரப்பினரை ஆட்சியில் அமரத்தினார்கள் என வரலாறு கூறுகிறது.

அந்த வரலாற்றின் அடிப்படையில் இலங்கை மக்களும் அடுத்த பொதுத் தேர்தலில் செயற்படுவார்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.



# “எமக்கில்லை இன்றைய நெருக்கடிகள்”

## இயற்கையுடன் ஒன்றித்த வாழ்வு, நிம்மதி தரும்


ஏ.எச்.ஏ ஹுஸைன்
husseinmedia000@gmail.com











“தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எந்த நெருக்கடியும் எம்மை அணுகியதில்லை. பாரம்பரிய வாழ்க்கை முறையில், எல்லாவற்றுக்கும் முகம் கொடுத்து நிறைவாகவும் நிம்மதியாகவும் வாழ்கின்றோம். இன உறவு, அன்பு, பாசம், பரிவு என்வனவற்றால் நெகிழ்ச்சியாக உள்ளது” என்று பெருமைப்பட்டுக் கொள்கின்றார் 70 வயதைக் கடந்து கொண்டிருக்கும் ஆதம்லெப்பை றஸியா உம்மா.

மட்டக்களப்பு - பதுளை வீதி, பிபிலையை அண்டியதாக அந்நகரத்திலிருந்து ஆறு மைல் தொலைவில் அமைந்திருக்கின்றது கொட்டபோவ எனும் இயற்கையின் எழில் கொஞ்சும் கிராமம். இங்குதான் ஏழு பிள்ளைகளின் தாயான றஸியா உம்மா தனது குடும்பத்தினருடனும் உற்றார், உறவினர், சுற்றத்தாருடன் வசித்து வருகின்றார்.

பௌத்த மதத்தைப் பின்பற்றும் சிங்களவர்கள், இஸ்லாம் மதத்தைப் பின்பற்றும் முஸ்லிம்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக, சுமார் 2,500 குடும்பங்களுக்கு அமைதியான வாழ்வு கொடுக்கிறது மெகம - கொட்டபோவ கிராமம். நிறைவையும் நிம்மதியையும் மக்களுக்கு வாரி வழங்கிக் கொண்டிருக்கும் கிராமத்தின் விசித்திர வாழ்க்கை முறையை இப்படி விவரிக்கிறார் றஸியா உம்மா.

“நான் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து கொண்டிருப்பது எல்லாமே இந்தக் கிராமத்தில்தான். எனது பெற்றோரும் எனது பெற்றோரின் பெற்றோரும் இங்கேதான் வாழ்ந்தார்கள். எங்களது கொட்டபோவ கிராமத்தைச் சூழ, சிங்கள மக்கள் சகோதர வாஞ்சையுடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

“மதத்தால், இனத்தால் நாங்கள் வேறுபட்டிருந்தாலும் மனித சமூகம் என்கின்ற வகையில், நாங்கள் ஒன்றென்று கருதி, மனித நேய உறவோடு வாழ்ந்து வருகின்றோம். எங்களுக்குள் எந்தக் குறைபாடும் இல்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள எந்தச் சிக்கலும் எங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. காரணம், நாங்கள் எல்லாவற்றுக்கும் இயற்கையை நம்பி அததைச் சார்ந்திருக்கின்றோம்.

“இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறை, எங்களுக்கு மன நிறைவைத் தந்திருக்கிறது. ஆடம்பர வாழ்க்கைக்குள் அகப்பட்டுக் கொள்ளாததால், இந்த நெருக்கடி காலத்திலும் எங்களைச் சமாளிக்க முடிகிறது.

“இயற்கை விவசாயமே, எங்களது வாழ்வும் வளமும் வாழ்வாதாரமுமாக உள்ளது. சேனைப் பயிர்ச் செய்கையால் எங்களது வாழ்வு வளம் பெறுகிறது. இதுவரை உணவுப் பஞ்சம் என்ற நிலைமை ஒருபோதும் எங்களுக்கு ஏற்பட்டதில்லை. இனியும் ஏற்படப்போவதில்லை என்று நம்புகின்றோம்.

“எங்களது சேனையில் சோளம், கௌபி, பயறு, நெல் என்பனவற்றைப் பயிரிடுகின்றோம். சேனையில் கிட்டத்தட்ட எல்லாமே உள்ளது. மரக்கறிகள், தானியங்கள், பழங்கள், கிழங்குகள் என்பவற்றை விளைவிக்கின்றோம். கிட்டத்தட்ட ஆறுமாத காலம், சேனைப் பயிர்ச் செய்கையில் கஷ்டப்பட்டால் அடுத்த ஆறுமாத காலத்துக்கு அதனை வைத்தே, எங்களது உணவுத் தேவையும் பொருளாதாரத் தேவையும் நிறைவு செய்யப்பட்டு விடும். தென்னை மரங்கள் செழித்து வளர்ந்து தேங்காய்களைத் தருகின்றன.

சுற்றிவரக் காடுகள்; இதனால் விறகு இலவசமாகக் கிடைக்கிறது. சமையலுக்காக எரிவாயுவை எந்தச் சந்தர்ப்பத்திலும் நாங்கள் நம்பியிருக்கவில்லை. நீர் வீழ்ச்சிகளில் இருந்து வழிந்தோடும் நீர் சேகரிக்கப்பட்டு, குழாய் மூலம் கிடைக்கிறது. சிலர் கறவை மாடுகளைப் பராமரிக்கிறார்கள். அதன் மூலம் தூய பாலைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

“எரிபொருள் இல்லாப் பிரச்சினை, விருப்பியபடி போக்குவரத்துச் செய்வதில் இடைஞ்சல்களையும் சிரமங்களையும் செலவு அதிகரிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. அதனை முடிந்தளவு சமாளிக்கிறோம். இங்கு பாரம்பரியமாக நாம், அதிக தூரம் நடந்தே பயணிப்போம். நான் முன்னரெல்லாம் நாளொன்றுக்கு ஐந்து, ஆறு மைல் தூரம் நடந்தே வாழ்க்கையைக் கழித்திருக்கின்றேன்.

நீர் வீழ்ச்சிகளிலிருந்து கிடைக்கும் குழாய் நீர் வருவதற்கு முன்னர், ஊரின் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் பொதுக் கிணறுதான் எங்களது நீர் மூலமாக இருந்தது. அரை மைல் தூரத்துக்கு நடந்து சென்று தலையில், இடுப்பில் தண்ணீர்க் குடங்களைக் காவிக் கொண்டு வருவோம். அவ்வாறு நடந்தது, கடின வேலை செய்ததன் பயன், இந்த 70 வயதிலும் ஆரோக்கியமாக இருப்பதாக உணர்கிறேன்.

“முன்னரெல்லாம், உரலில் உலக்கையால் நெல்லுக் குற்றுவோம். அம்மிக் கல்லில் வைத்து குழவியால் குரக்கன், மிளகாய் அரைப்போம். அது பாரம்பரியமாக, எமது நாளாந்த வாழ்க்கை முறையின் ஒரு பகுதியாக இருந்தது. இது எல்லாவற்றையும் விட, எங்களை இந்தளவுக்கு நிறைவாக நிம்மதியாக வாழ வைத்திருப்பது சமூகங்களுக்கிடையிலான சக வாழ்வுதான்.

இனக் கலவரம் என்பதை, 200 வருடங்களைக் கொண்ட இவ்வூர் வரலாற்றில் நாம் அறிந்திருக்கவில்லை. அதேவேளை, நாட்டின் இன்ன பிற பகுதிகளில் இடம்பெறும் இனக்கலவரங்களின் தாக்கம் எங்களுக்கு ஒரு போதும் பாதிப்பை ஏற்படுத்தவுமில்லை. நாட்டின் வேறு பகுதிகளில் முஸ்லிம்கள் தாக்கப்படும்போது, நாங்கள் ஒரு போதும் நிம்மதியின்றி அச்சத்துடன், தூங்காமல் இரவைக் கழித்ததில்லை. சிங்கள, தமிழ் மக்கள் எங்களோடு, எங்களுக்காக இருக்கிறார்கள் என்ற உணர்வு, எங்களை அச்சம், பயமின்றி, இயல்பாக வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது” என்கிறார் அந்த மூதாட்டி.

மக்கள் தங்களது பிரச்சினைகளையும் தேவைகளையும் தாங்களாகவே இனங்கண்டு தீர்த்துக் கொள்ள வேண்டிய கொள்ளளவும் ஆற்றலும் அறிவும் மக்களிடம் உள்ளூரிலேயே இருக்கிறது (*Local Capacity for Peace*). அவற்றை உயிர்ப்பிக்க வேண்டிய தேவை உள்ளது.

எம்மை சூழ உள்ள எல்லா மக்கள் தரப்போடும், பண்பாட்டின் மூலம் சகவாழ்வை வளர்ப்பது தேவையாக உள்ளது. அடுத்தவர் பற்றிய வெறுப்பு, குரோதம், பொய் கூறல் எல்லாவற்றையும் துறந்து, எல்லோருமே தங்களை மனதால் புதுப்பித்துக்கொண்டு வாழ ஏற்புடைமை பெற வேண்டும்.

நமது வாழ்வும் மனித உறவும், மகத்துவத்தை ஏற்படுத்த வேண்டும். அது மாண்புமிகு என்கின்ற நிலைக்கு எங்களை கொண்டு சேர்க்க நாம் நம்மை தயாரித்துக்கொள்ள வேண்டும்.

பசியும் பயமும் நோயும் இல்லாத பூமியை, நாம் வளப்படுத்தல் மூலம் உருவாக்க திடசங்கற்பம் பூணுவோமாக! ஒப்பீட்டளவில் இந்த ஆதங்கம் சரியானதுதான் என்றே தோன்றுகின்றது.

வாழ்விடம், உயிர், உடமை, நிம்மதி என்று எல்லாவற்றையும் பாதுகாப்பதற்கு, நிம்மதி, சமாதானம், பாதுகாப்பான வாழ்க்கைச் சூழல் என்பவை அவசியம் தேவை. வெளியிலிருந்து ‘இறக்குமதி’ செய்யப்படும் இனவாத, மதவாத, வகுப்பு வாத இன்னும் பால்நிலை சார்ந்த விடயங்கள், மக்களைக் குழப்பி விடாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

எப்பொழுதுமே நாங்கள் வெளியிலிருந்துதான் எல்லாவற்றையும் எதிர்பார்க்கும் மனநிலைக்குப் பழக்கப்படுத்தப்பட்டுவிட்டதால், இப்பொழும் தொழுவத்து மாடுகள்போல சுற்றிக் கொண்டிருக்கின்றோம்.

உள்ளூர் சகவாழ்வையும் பலத்தையும் மக்கள் குறைத்து மதிப்பிட்டு விடாமல், பிரச்சினைகளையும் தீர்வுகளையும் தேவைகளையும் வளங்களையும் சிறப்பான முறையில் இனங்கண்டு அபிவிருத்தியையும் சமாதானத்தையும் அடைந்து கொள்ளவேண்டும்.

# நிஜவுலக கடவுள்





மஹேஸ்வரி விஜயனந்தன்
mayurisaai@gmail.com

மனிதனின் உயிர்நாடி இதயம். நம் உடலில் அனைத்து உறுப்புகளை விடவும் இது அதி முக்கியத்துவம் வாய்ந்தது; அற்புதமானது. இதயம் விரிந்து சுருங்கி எப்போதும் இடைவிடாது, தொடர்ந்து இயங்கி வருகிறது. ஒரு நிமிடத்துக்கு 60 முதல் 80 தடவை சுருங்கி விரியும் பணி நடைபெறுகிறது. நாள்தோறும் சராசரியாக ஒரு இலட்சம் முறை இதயம் துடிக்கிறது.

அவ்வாறான இதயம் துடிக்க மறுக்கும் சந்தர்ப்பங்களை தனக்கு சவாலாக எடுத்துக்கொண்டு இதயத்தை மீண்டும் துடிக்க வைக்கும் வைத்தியரின் அர்ப்பணிப்பான சேவை பற்றி இக்கட்டுரை அமைகின்றது.

தனியார் வைத்தியசாலையில் பிரசவிக்கப்பட்ட இரட்டை சிசுக்களில் ஒரு சிசு எதிர்நோக்கிய இருதய நோய் பற்றியும் அதனால் அந்த சிசுவின் பெற்றோர் எதிர்நோக்கிய பிரச்சினை, அதற்காக அவர்கள் பணத்தை வாரி இறைத்தும் பயனற்று வேறொரு வைத்திய நிபுணரை நாடி, குற்றுயிராய் கிடந்த தமது சிசு இன்று கரங்களில் வைத்து கொஞ்சுவதைப் பற்றியும் பணத்தை வாரி இறைத்தும் பயன் பெற முடியவில்லை எனும் தலைப்பின் கீழ் ஜூன் 18 ஆம் திகதியன்று வெளியான கட்டுரையில் பேசியிருந்தோம்.

அதன் தொடர்ச்சியாக குறித்த தனியார் வைத்தியசாலையில், சிசுவைக் காப்பாற்றுவதற்காக ஒரு வைத்தியரின் பெயரைப் பரிந்துரைத்தார்கள் என கூறினோம். அவரே இன்று அந்த பெற்றோருக்கு மாத்திரமல்ல அவர்களைப் போன்று பல பெற்றோருக்கு நிஜத்தில் தெய்வமாக விளங்குகின்றார் என்று கூறினால் தவறாகாது.

ஆம், அவர்கள் பரிந்துரைத்த பெயர் தான் வைத்திய கலாநிதி சிதம்பரநாதன் முகுந்தன் ஆவார். இவர் இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சை நிபுணராக கொழும்பு சீமாட்டி றிச்வே சிறுவர் வைத்தியசாலையில் (Lady Ridgeway Hospital for Children) கடமையாற்றி வருகிறார்.

இனி கடந்த வாரம் கூறப்பட்ட அந்த சிசுவுக்கு எவ்வாறான பிரச்சினைகள் காணப்பட்டன, அவை எவ்வாறு வெற்றிகரமாக இந்த வைத்தியர் உள்ளிட்ட சீமாட்டி வைத்தியசாலையின் வைத்திய குழாமால் முன்னெடுக்கப்பட்டன என்பதைப் பார்ப்போம்.

தனியார் வைத்தியசாலையின் நிபுணர்கள் டொக்டர் முகுந்தனை பரிந்துரைத்ததை தொடர்ந்து, சிசுவின் தந்தை அவரை நேரடியாக இரவு 9 மணியளவில் தொடர்பு கொண்டு சிசுவின் ஆபத்தான நிலையை விளக்கி, இச்சிசுவை உங்களால் காப்பாற்ற முடியுமா? என வேண்டியுள்ளார்.

அதற்கு டொக்டர் முகுந்தன் அவர்கள் இந்தக் குழந்தைக்கு உடனடியாக இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை விளக்கியுள்ளார். மேலும் இச்சத்திர சிகிச்சையில் ஏற்படும் ஆபத்துகளையும் அவர் விபரித்துள்ளார். தான் இதய வைத்திய நிபுணருடன் கலந்தாலோசித்து, மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று கூறுவதாக தெரிவித்துள்ளார்.

டொக்டர் முகுந்தன், இதய வைத்திய நிபுணருடன் கலந்தாலோசித்து விட்டு, இச்சிசுவுக்கு *Obstructed Infra Cardiac Total Anomalous Pulmonary Venous Connection* என்ற பிறப்பில் ஏற்படும் இருதய குறைபாடு;



அதாவது, நுரையீரலிருந்து வரும் ஒக்ஸிஜென்ட் கூடிய குருதி (*Oxygenated Blood*) இதயத்தின் இடது சோனை அறைக்குள் (*Left Atrium*) செல்லாது கீழ் பெருநாளத்தினுள் (*Inferior Vena cava*) திறப்பதனால் இக்குழந்தைக்கு குருதியில் ஒக்சிஜனின் அளவு (*Oxygen Saturation*) குறைவாக காணப்படும். இதனால் இருதயம், நுரையீரல் மற்றும் ஏனைய உடல் உறுப்புக்கள் செயலிழப்பதனால், தொடர்ந்து உயிர் வாழ முடியாத நிலை ஏற்படும். எனவே, இக்குழந்தைக்கு உடனடியாக இருதய சத்திர சிகிச்சை மூலம் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டும்.

மேலும், இக்குழந்தை மிகவும் நிறை குறைந்ததாகவும் (Low weight), குறை வளர்ச்சியானதாகவும் (*Prematurity*), நோய் நிர்ணய தாமதத்தால் மற்றைய உடல் உறுப்புக்களின் செயற்பாடுகளில் பாதிப்பு இருப்பதாலும் (*Delayed diagnosis and Multi organ dysfunction*), இந்தக்குழந்தைக்கு சத்திரச் சிகிச்சையால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் அதிகம் என்றும் கூறியிருந்தார். மேலும் இச்சிசுவை கொழும்பு சீமாட்டி றிச்வே சிறுவர் (*LRH*) வைத்தியசாலைக்கு மாற்றினால் தாம் குழந்தையின் நலனை பொறுப்பெடுப்பதாக கூறி அதற்குரிய ஒழுங்குகளை ஏற்படுத்தி கொடுத்திருந்தார்.

மறுநாள் காலை 5 மணிக்கு இச்சிசு சீமாட்டி றிச்வே சிறுவர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு உடனடியாக அன்று காலை 9 மணியளவில் இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆறு மணித்தியால சத்திர சிகிச்சையின் பின் சிசு, அதி தீவிர சிகிச்சை பிரிவில் (*Intensive Care Unit*) கண்காணிக்கப்பட்டது. தீவிர கண்காணிப்பு பிரிவில் குழந்தையின் நிலைமை படிப்படியாக முன்னேறி பெற்றோரிடம் 3 வாரங்களின் பின் கையளிக்கப்பட்டது.

> **இவ்வாறான பல இருதய சத்திரசிகிச்சைகளை வெற்றிகரமாக செய்து, பலரது இதயம் நின்றுவிடாது துடிப்பதற்கு காரணமான வைத்திய நிபுணர் முகுந்தன் போன்றவர்களே நிஜவுலகில் தெய்வங்களாக மதிக்கப்பட வேண்டியவர்களாவர்**

டொக்டர் முகுந்தனும் அவருடைய குழாத்தினரும் மிகவும் கண்ணும் கருத்துமாக இக்குழந்தையை பராமரித்து மிகுந்த சவால்களுக்கு மத்தியில் இக்குழந்தைக்கு புத்துயிர் கொடுத்துத்துள்ளனர்.

மேலும் வைத்திய நிபுணர் முகுந்தனும் அவரது குழாத்தினரும் கடந்த வருடம் கொரோனா தொற்றுக்குள்ளான தாய் ஒருவர் இருதய பிரச்சினையுடன் பிரசவித்த சிசுவுக்கு பல்வேறு சவால்களுக்கு மத்தியில் துணிந்து, தமக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளை பொருட்படுத்தாது சத்திரசிகிச்சையை மேற்கொண்டு பலராலும் பாராட்டு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே இவ்வாறான பல இருதய சத்திரசிகிச்சைகளை வெற்றிகரமாக செய்து, பலரது இதயம் நின்றுவிடாது துடிப்பதற்கு காரணமான வைத்திய நிபுணர் முகுந்தன் போன்றவர்களே நிஜவுலகில் தெய்வங்களாக மதிக்கப்பட வேண்டியவர்களாகும்.

சர்வதேச கிரிக்கெட் பெண்கள் அணியில்

# "நான் விளையாடுவேன்"



சுப்பிரமணியம் பாஸ்கரன்

'சர்வதேச பெண்கள் கிரிக்கெட் அணியில் நான் விளையாடுவேன் என இலங்கை பெண்கள் உத்தேச அணிக்கு தெரிவாகியுள்ள கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி மாணவியான சதாசிவம் கலையரசி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தனது ஆளுமை மற்றும் எதிர்காலம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில் எனது பெயர் சதாசிவம் கலையரசி. நான் சென். திரேசா மகளிர் கல்லூரியில் கல்விகற்கிறேன். எனக்கு கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம் வர எனது அப்பாவே காரணம். அவர் ஒரு கிரிக்கெட் ரசிகர் அவருடன் சேர்ந்து நானும் கிரிக்கெட் பார்ப்பதுண்டு. பின்பு பாடசாலையூடாக கிரிக்கெட் பயிற்சி பெற்று தற்போது இலங்கை பெண்கள் உத்தேச அணிக்குத் தெரிவாகியுள்ளேன். மிகவும் மகிழ்ச்சி. அத்துடன் 'சர்வதேச பெண்கள் கிரிக்கெட் அணியில் நான் விளையாடுவேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையினைப் பொறுத்தவரை கிரிக்கெட் விளையாட்டில் பெண்களின் பிரவேசம் ஆண்வீரர்களுடன் ஒப்பிடும் போது கணிசமான அளவில் குறைவாகவே இருக்கின்றது. அதிலும் தமிழ் பேசும் வீராங்கனைகளை நோக்கும் போது மிகவும் குறைந்த அளவிலேயே கிரிக்கெட்டில் ஆர்வம் காட்டுகின்றனர்.ஆனால் சாதனைக்கு எதுவும் தடையில்லை என நிரூபித்திருக்கின்றார்

கிளிநொச்சி மாவட்டத்தினைச் சேர்ந்த சதாசிவம் கலையரசி. உள்நாட்டு யுத்தம் மூலம் பாதிக்கப்பட்ட தனது பிரதேசத்தில் இருந்து தனது கடின முயற்சிகள் மூலம் 19 வயதின் கீழ்ப்பட்ட இலங்கை மகளிர் கிரிக்கெட் எதிர்பார்க்கை குழாத்தில் வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றார்.

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த கலையரசிக்கு அவரது அப்பா தினக்கூலி செய்து கிடைக்கும் வருமானத்தில் இருந்தே கிரிக்கெட் விளையாட்டிற்கான ஆதரவினை வழங்கியதோடு அந்த ஆதரவு அவரினை இன்று தேசிய அணிக்கு அழைத்துச் செல்வதற்கான வாயிலையும் திறந்து வைத்திருக்கின்றது.

கிரிக்கெட் மாத்திரமில்லாது சிறு வயதில் இருந்தே அனைத்துவகையான விளையாட்டுக்களிலும் ஆர்வம் காட்டிய சதாசிவம் கலையரசி தற்போது வேகப்பந்துவீச்சாளராக கிரிக்கெட் போட்டிகளில் திகழ்ந்து வருவதோடு அதிரடியான முறையில் துடுப்பாடியும் வருவதாக கலையரசியின் பயிற்சியாளராக காணப்படும் ஜீவரத்தினம் பிரியதர்ஷன் குறிப்பிட்டார்.

அவர் (கலையரசி) உறுதியான ஒரு வேகப்பந்து வீச்சாளர் நம்பிக்கையுடனும் தொடர்ச்சியாகவும் சிறந்தமுறையில் காணப்படுகின்றார். அத்துடன் அவரின் துடுப்பாட்டமும் முன்னேறியிருக்கின்றது. நான் விளையாடுகின்றவாறு அவரும் துடுப்பாடுவதனை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது. அத்துடன் அது நாளுக்கு நாள் முன்னேறுகின்றது.'

தற்போது 16 வயதினை அடைந்திருக்கும் சதாசிவம் கலையரசி இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீராங்கனையாக காணப்படும் சமரி அத்தபத்துவினை தனக்கு முன்னுதாரணமாக எடுப்பதாக குறிப்பிட்டதோடு அவரைப் போன்று எதிர்காலத்தில் விளையாட விருப்பம் கொண்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

கிளிநொச்சி நகருக்கு அண்மித்த வறுமைக்கோட்டின் கீழ் அதிகளவான மக்கள் வாழுகின்ற ஒரு கிராமமாக பெரிய பரந்தன் கிராமம் காணப்படுகின்றது.

ஒரு குக்கிராமத்தில் சதாசிவம் கலையரசி பிறந்து இவ்வாறு ஒரு திறமைசாலியாக வளர்ந்து வருகின்றார். குறித்த கிராமமானது யுத்தத்துக்குப் பின்னர் மீள் குடியேறிய மக்களைக் கொண்ட ஒரு கிராமமாக காணப்படுகின்றது என்பதுடன் கிராமத்தில் கிட்டத்தட்ட 150-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.













இதில் அதிகமான குடும்பங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்கள். இவ்வாறானவர்களில் பல பெண்கள் மனித நேய கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அதைவிட ஏனையவர்கள் நாளாந்தம் கூலி வேலை செய்பவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இவ்வாறான நிலையில் வாழும் குடும்பங்களில் ஒன்றுதான் கலையரசியின் குடும்பமும் கலையரசியின் தந்தை நாளாந்தம் தின கூலி செய்து வரும் நிலையில் அவருடைய குடும்ப வருமானம் போதாத நிலையில் தாயார், மத்திய கிழக்கு நாடு ஒன்றுக்கு பணி பெண்ணாக வேலை தேடிச்சென்று இப்பொழுது அங்கே இருக்கின்றார்.

இவ்வாறு வறுமையிலும் வாழ்வதற்கு வீடு இன்றியும் நீண்ட காலம் வாழ்ந்த கலையரசி, தன்னுடைய வாழ்நாள் காலத்தில் ஒரு சாதனையாளராக - வளர்ந்து வரும் சாதனையாளராக கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெருமை தேடி கொடுத்திருக்கின்றார்.

இவரை அண்மையில் இந்தியத் துணைத் தூதர் சந்தித்து பரிசில் வழங்கி கௌரவித்திருக்கின்றார். பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் பலதரப்பட்டவர்கள் தங்களுடைய ஆதரவுகளை தெரிவித்து அவருக்கு ஊக்கப்படுத்தி இருக்கின்றார்கள். இவ்வாறு பின்தங்கிய கிராமங்களில் இருக்கின்ற பல சாதனையாளர்கள் தங்களுடைய சாதனைகளை நிலைநாட்டி வருகின்றார்கள்.

இதே போல தான் அன்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கருப்பட்டமுறிப்பு கிராமத்திலே குத்துச்சண்டை போட்டியிலே தங்கம் வென்ற இந்துகா இவ்வாறான ஒரு பின்தங்கிய கிராமத்திலே இருந்து தன்னுடைய சாதனையை நிலைநாட்டி இருக்கின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நகரத்திலிருந்து எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு அப்பால் அன்றாடம் வறுமைகளையும் துன்பங்களையும் சுமையாக ஏற்று ஒரு சாதனையாளராக வளர்ந்திருப்பதற்கு இவர்கள் ஓர் உதாரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

# புகைக்கூடு வீடு தேடும் படலம்

## பாரம்பரியங்களும் பண்பாடுகளும் எம்மை வாழவைக்க வந்தவையே!

பாலகிருஸ்ணன் சிவரஞ்சன்





அண்மையில் ஓர் அந்தியெட்டி நிகழ்வுக்குச் (இந்துக்கள் மரணமடைந்து 31ஆம் நாள் செய்யப்படுகின்ற கிரியை) சென்றிருந்தேன். பூசை வழிபாடுகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து, மதிய போசனம் நடைபெற்றது. மதிய போசனத்தில் கலந்து கொண்டவர்கள் தங்களது கைகளைக் கழுவச் சென்ற போது, அங்கு வாளிகளில் தண்ணீர் இல்லை. அதிக வேலைப்பழுக்களுக்கு மத்தியில் வீட்டுக்காரர் வாளிகளில் தண்ணீர் நிரப்பி வைக்க மறந்து விட்டார்கள் போலும்!

"ஒருக்கா மோட்டர் சுவிச்சை போட்டு விடுங்கோ" என அங்கு நின்ற ஒருவர் கூறினார்.

"கறன்ட் போட்டுது" எனப் பதில் வந்தது.

"சரி போன கறன்ட் போகட்டும். நாங்கள் கிணத்தடியில போய் கழுவுவோம்" என முதியவர் ஒருவர் கூற, சிலர் கிணத்துப் பக்கம் சென்றார்கள். அங்கு கிணத்தில் கப்பியையும் காணோம்; கயிற்றையும் காணோம் எனப் புறுபுறுத்த வண்ணம் திரும்பி வந்தனர். பின்னர், ஒருவாறாக பக்கத்து வீட்டிலிருந்து நீரைப் பெற்று, நிகழ்வுகள் இனிதே முடிவுற்றன.

அதைப் போலவே, தற்போது கட்டப்பட்ட பல வீடுகளது சமையறையில் புகைக்கூடுகள் இல்லை. முற்றுமுழுதாக எரிவாயுவை நம்பி, புகைக்கூடுகள் தேவையற்ற ஒன்றாக மாறி விட்டன. ஆனால், இன்று எரிவாயுவும் இல்லை; மண்ணெண்ணையும் இல்லை. விறகைக் கொண்டு சமையல் செய்ய புகைக்கூடும் இல்லை.

யாழ்ப்பாண நகரிலிருந்து அண்ணளவாக பத்து கிலோ மீற்றர் தொலைவிலுள்ள நண்பர், ஒரு வருடத்துக்கு முன்னர், தனது வீட்டை முழுமையாகத் திருத்திக் கட்டினார். அவ்வேளை, வீட்டு சமையல் அறையில் முன்னர் காணப்பட்ட புகைக்கூட்டை உடைத்து, புகைக்கூடு இல்லாத சமையல் அறையை, நவீன வடிவில் கட்டி, பெருமைப்பட்டார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக, அவர்களது வளவில் போதியளவு காணப்படுகின்ற விறகைக் கொண்டு, சமையல் செய்வதற்கு புகைக்கூடு இல்லாமையால், வீட்டின் தாழ்வாரத்திலும் மர நிழலின் கீழும் சமையல் செய்கின்றார்கள். அத்துடன், மழை காலத்துக்கு முன்னர் புகைக்கூடு கட்டத் திட்டமிட்டும் உள்ளார்.

இடப்பற்றாக்குறை, புகை வெளியேறுவதன் காரணமாக அயலவருக்கு ஏற்படுகின்ற அளெகரியம் என, சன அடர்த்தி மிக அதிகமாக உள்ள நகர்ப்புறங்களில் உள்ள வீடுகளில், புகைக்கூடு கட்டாது இருப்பினும் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், கிராமங்களில் கூட சிலர் எரிவாயுவைப் பயன்படுத்தினாலும் புகைக்கூடு இல்லாது வீடு கட்டுவதும் தரமான முறையில் இருந்த புகைக்கூடுகளை இடித்து தள்ளியதும் ஏற்றுக் கொள்ள முடியாதவைகள் ஆகும்.

சில வகையான மரங்கள், கற்களை வழிபடுவது அல்லது, மரத்தின் கீழ் கல்லை வைத்து சிறிய கோவிலாகவே வழிபடுவது; சூரியனை வழிபடுவது (தைப்பொங்கல்) போன்ற இயற்கை வழிபாடு, தமிழ் மக்களது பாரம்பரிய, கிராமிய வழிபாடுட்டு முறைகளில் உயர்வான இடத்தை வகிக்கின்றன. இதைத் தவிர நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், என்பனவற்றை ஐம்பூதங்கள் என தெய்வத்துக்கு ஒப்பாகத் துதிக்கும் முறைகளும் அவர்தம் வழிபாட்டு முறைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

> **வீட்டு சமையல் அறையில் முன்னர் காணப்பட்ட புகைக்கூட்டை உடைத்து, புகைக்கூடு இல்லாத சமையல் அறையை, நவீன வடிவில் கட்டி, பெருமைப்பட்டார்**

அவ்வாறே, வீடு கட்டும் போதும் எங்களது காணியில் (நிலம்) கிணறு (நீர்) சமையல் அறை (நெருப்பு) என்பவை எங்கு, எவ்வாறு அமைய வேண்டும் என நிலையம் (அமைவிடம்) பார்த்தே வீடு கட்டுகின்றோம். ஆகவே, நாம் காலங்காலமாக உடல், உள நலத்துடன் சீரும்சிறப்பாகவும் பெயரும் புகழோடும் வாழப் போகின்ற வீட்டில், இவ்வாறு செய்கின்றமை; அவற்றை நம்புகின்றோம். எனவே, அவ்வாறான வீட்டில் உள்ள அடுப்பை உடைக்கலாமா, அதனை இழக்கலாமா?

ஒவ்வொரு காலப் பகுதியிலும் விதம் விதமான நவீனத்துவங்கள், எங்கள் வாழ்வில் நுழையவே



செய்கின்றன. அவற்றை நாம் விரும்பியோ அல்லது, விருப்பின்றியோ ஏற்றுக் கொள்ளவே வேண்டும். ஆனால், நவீனத்துவங்கள் என்ற போலிப் போர்வையில், எங்கள் பாரம்பரியங்களையும் பண்பாடுகளையும் இழக்கவே முடியாது; இழக்கவும் கூடாது.

வேகமாக மாற்றமடைந்து வருகின்ற இயந்திரமயமான வாழ்வியல் முறையில், எங்களுக்கு விருப்பமில்லாத அல்லது, ஒத்திசைவில்லாத சில பழக்கங்களை எங்கள் வழக்கங்களாக நாம் கட்டாயமாகவே பின்பற்றவே வேண்டும். அதுவே, எமது பழக்கவழக்கங்களாகவும் நம்பிக்கைகளாகவும் எங்கள் பரம்பரைகளுக்கு கடத்தப்பட்டும்.

எமது மூதாதையர்களால் காலங்காலமாக பின்பற்றப்பட்டு வந்த பல பண்பாட்டு விழுமியங்களை, இன்றைய முதலாளித்துவ அறிவியல் வளர்ந்த நவீன உலகில் நாம் இழந்து விட்டோம். அவற்றைப் பின்பற்றுவபர்களை 'பழைய பஞ்சாங்கம்' என்று கூறி, மகி(இக)ழ்கின்றோம். ஆனால், அவற்றுக்குப் பின்னால் பல நன்மைகள் இருந்துள்ளன.

தினசரி சமைக்கும் போது, ஒரு பிடி அரசியை எதிர்காலத் தேவைக்காக சேமித்து வைக்கும் பழக்கம், யாராவது ஒருவர் விருந்தாளியாக வரலாம் எனக் கொஞ்சம் கூடுதலாக சோறு சமைப்பது, அவ்வாறு எவரும் வராதவிடத்து மறு நாள் சத்தான பழஞ்சோற்றை காலை உணவாக உண்பது எனப் பல உயர்ந்த அம்சங்களை தமிழ் இனம் தன்னகத்தே கொண்டது.

நாம் இன்று சற்றும் எதிர்பாராத அடுப்பு விடயம், அடுக்கடுகாக பல சிக்கல்களை தருவது போலவே, எதிர்காலங்களில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டி வரலாம்.

பெரும் பொருளாதார நெருக்கடியை நாடு எதிர் கொள்ளவுள்ளதாக அனைவரும் அலாரம் அடித்து விட்டார்கள். ஆகவே, எது வரினும் நீண்ட கால அடிப்படையில் எமது இனத்தினது இருப்பைத் தக்க வைக்கவும் குறுகிய கால அடிப்படையில் தற்போதைய பொருளாதார நெருடல்களை எதிர்கொள்ளவும் எமது விழுமியங்களை பேணிப் பாதுகாப்பது, எம் அனைவரதும் தலையாய கடமை ஆகும்.

'அம்மா இல்லாத இல்லம், ஆண்டவன் இல்லாத ஆலயம்' என்பது போன்றே, 'அடுப்பு இல்லாத வீடும் முழுமை பெறாத இல்லமாகும்'.



---

மட்டக்களப்பு கலைஞர்களுக்கு

# கைகொடுக்கும் ஓய்வூதியம்



வ. சக்திவேல்

shagthivel@gmail.com





எந்த மொழி புரியாதவர்களுக்கும், புரியவைக்கும் ஒரு மிகப்பெரிய 'ஊடகம்'தான் கலை. தாம் சார்ந்த கலைத்துறையூடாக சமூகத்தை வழிநடத்தி வரும் கலைஞர்களுக்கு கிடைக்கும் வேதனம் என்பது, மிகச் சொற்பமாதாகவே காணப்படுகின்றது. குறிப்பாக, கிராமியக் கலைகளை மழுங்கடிக்கவிடாது பேணிப் பாதுகாத்துவரும் கலைஞர்களின் வருமானம் என்பது மிகமிகக் குறைவானதாகும்.

குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமக்கள் தோறும் தாம் சார்ந்த கலைகளை இடைவிடாது உயிரூட்டி, கடைப்பிடித்துவரும் கலைஞர்கள், அக்கலைலூடாகக் கிடைக்கும் வருமானத்தில்தான் தமது வாழ்க்கையை 'தெல்லோட்டி'க் கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், அரசாங்கத்தின் நிர்வாகச்சக்கரம், வளர்ந்து வரும் கலைஞர்கள் தமது வாழ்வாதாரத்தில் திழைக்க வேண்டும் என்பதற்கிணங்க, கலைஞர்களுக்குரிய காப்புறுதி, ஒய்வுதியம் ஆகிய திட்டங்களை அமல்படுத்தியுள்ளது. இதனூடாக, மாவட்டத்தில் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ள கலைஞர்கள் ஓய்வூதியத் திட்டத்தினுள்ளும் காப்பறுதி திட்டத்தினுள்ளும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இலங்கை சமூக பாதுகாப்பு சபையால் வழங்கப்படும் காப்புறுதி, ஓய்வூதியம் ஆகியவற்றைப் பெறுவதற்கு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கான ஆவணங்களைக் கையளிக்கும் நிகழ்வு, அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கலைஞர்கள் நிதியை நோக்கிப் பயணிப்பவர்கள் அல்ல; அவர்கள் சமூகம் சார்ந்து தமது கலைப் படைப்புகளை வெளியிடுகின்றார்கள். இவ்வாறுதான் கலைஞர்களின் செயற்பாடுகள், வரலாற்றுப் போக்கில் இடம்பெற்று வருகின்றன.

தற்போது மாறி வருகின்ற பொருளாதார சமூக மாற்றத்துக்கு ஏற்ப, கலைஞர்களும் பொருளாதார ரீதியில் வளம் பெறவேண்டும்; அவர்களும் நம்பிக்கையுடன் வளம்பெற வேண்டும் என்ற சிந்தனைக்கு ஏற்ப, அரசாங்க ஊழியர்கள் எவ்வாறு ஓய்வூதியம் பெறுகின்றார்களோ கலைஞர்களும் 60 வயதைக் கடந்ததும் ஓய்வூதியம் பெறுவதற்குரிய வசதி வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அரச ஊழியர்கள் எவ்வாறு நோய்வாய்ப்படும் வேளையில் காப்புறுதிகளைப் பெறுகின்றார்களோ அவ்வாறே கலைஞர்களும் காப்புறுதிகளைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவை கலைஞர்களுக்கு கிடைக்கும் எதிர்பாராத அதிர்ஷ்டங்களாகும். கலைஞர்களின் கலைப் படைப்புகளுக்கு பாராட்டுகளும் கைத்தட்டல்களும் கிடைக்கப்பெறும். இந்நிலையில், கலைஞர்களை நம்பியிருக்கின்ற குடும்பங்கள், பிற்காலத்தில் வாழ்வதற்குரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இது கலைஞர்களின் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றமாகும்.

"எதிர்காலத்தில் நாம் பாரிய பொருளாதார சவால்களை எதிர்கொள்ளக் காத்திருக்கின்றோம். இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் முதற்கட்டமாக ஐந்து கலைஞர்கள் ஓய்வூதியத் திட்டத்திலும் 13 கலைஞர்கள் காப்புறுதித் திட்டத்தின் கீழும் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். எதிர்காலத்தில், மேலும் இளம் கலைஞர்களை உள்வாங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன" என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருனாகரன் தெரிவிக்கின்றார்.

காலாசார அமைச்சும் இலங்கை சமூக பாதுகாப்பு சபையும் இணைந்து மட்டக்களப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் வாழ்வுக்கு வழிசமைத்துள்ளது. இதற்காக வேண்டி, கலைஞர்களுக்குரிய இலவச காப்புறுதியை 'சொப்லொஜிக்' நிறுவனமும் ஓய்வூதியத்தை இலங்கை சமூக பாதுகாப்பு சபையும் வழங்குவதற்கு முன்வந்துள்ளன.







அரச ஊழியர் ஒருவர் 'அக்கரகரா' காப்புறுதி நிறுவனத்தில் எவ்வாறு சலுகைகளைப்பெறுகின்றார்களோ அதுபோல், இத்திட்டத்தால் கலைஞர்களும் நோய் வாய்ப்பட்டிருக்கும்போது சிகிச்சை பெறுதல், உள்ளிட்ட பல விடயங்களை உள்ளடக்கியதாக காப்புறுதி, 60 வயது முடிவுற்றதும் மாதாந்த ஓய்வூதியத்தையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதற்காக அரசாங்கம், தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கு 50,000 ரூபாய் பணத்தை அவர்களது வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யவுள்ளது. இந்தப் பணம் கலைர்கள் 60 வயதை எட்டியதும் ஓய்வூதியத்துடன் சேர்ந்து மீளப்பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் வைப்பிலிடப்பட உள்ளது. அரச உத்தியோகஸ்தர்கள் தமது ஓய்வூதிய காலத்தில் எவ்வாறு கௌரவமாக வாழ்கின்றார்களோ, அதுபோல் நாட்டுக்காகப் பங்களிப்புச் செய்கின்ற கலைஞர்களையும் அரசாங்கம் புறந்தள்ளிவிடாமல் அவர்களும் அவர்களது வயோதிய காலத்தை கௌரவமாகக் கழிக்க வேண்டும் என்பதற்காக, தற்போது காப்புறுதி, ஓய்வூதிய திட்டங்களை அரசு அமல்படுத்தியுள்ளது.

"கடந்த காலங்களில் இருந்த கலைஞர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைத்திருக்கவில்லை. எனினும், தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு, இந்த அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது" என இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் இணைப்பதிகாரி ஏ.எல் அமீன் தெரிவித்தார்.

இலங்கையில் கலைத்துறைக்குப் பெயர்போன மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் திகழ்கின்றது. மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்கள் முதல் நகர்புறங்கள் வரைக்கும் கலையில் ஊறிப்போன மக்களாகவே காணப்படுகின்றனர். ஆனாலும் இவ்வாறு அடிமட்டத்திலிருந்து கலைக்காகவே தம்மை அற்பணித்து வாழ்ந்து வருபவர்கள், பிரதேச மட்டத்திலிருந்து சர்வதேச மட்டம் வரைக்கும் சாதனைகளை நிலை நாட்டி விருதுகளும் பாராட்டுகளும் பெறுகின்றனர்.

இந்நிலையில், அவர்கள் கலைகள் ஊடாகப் பெறும் வேதனம், மிகக் குறைவு எனலாம். இந்த நிலையில்தான் கலைஞர்களும் தமது ஓய்வு காலத்தை கச்சிதமாகக் கழிக்க வேண்டும் என்பதற்காக, அரசாங்கம் இவ்வருடத்திலிருந்து ஓய்வூதியம், காப்புறுத்தி ஆகிய திட்டங்களை அமல்படுத்தியுள்ளது. முற்கட்டமாக, மாவட்டத்தில் குறிப்பிட்ட அளவான கலைஞர்கள், இதில் தெரிவு செய்யப்பட்டாலும் மாவட்டத்திலுள்ள ஏனைய பல நூற்றுக்கணக்கான கலைஞர்கள் மத்தியிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, அது செயல்வடிவம் பெறும் பட்சத்திலேயே, அதன் உச்சப் பலாபலன்களை கலைஞர்கள் பெற்றுக் கொள்வார்கள் என்பதுவே திண்ணம்.

# பொறுமையை இழந்து நிற்பதால் சமாளிப்பு கதைகள் வேண்டாம்

அடுத்தக்கட்டத்தை நோக்கி அதிரடியாக நகர முடியாத அளவுக்கு அரசாங்கம் தடுமாறிக் கொண்டிருக்கிறது. அதனால்தான், எரிபொருட்கள், எரிவாயு வரும் கப்பல்கள் தொடர்பில் புள்ளிவிவரங்களை அவ்வப்போது வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்கான காரணங்களையும் கூறி, விளங்கப்படுத்துவதற்கு ஆரம்பித்துள்ளது. புள்ளிவிவரங்களைக் கேட்டுக்கேட்டு மக்களுக்கே புளித்துவிட்டது.

சுயதொழில் செய்வோர், கூலிவேலைகளுக்கு போவோர், கூலிக்காகவும் குடும்பத்துக்காகவும் சாரதிகளாக பணியாற்றுவோர் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். எரிபொருள்கள், மண்ணெண்ணெய் இன்மையால், பகிரங்கமாகக் கூறாவிடினும் பலரும் பட்டினி இருந்துவிடுகின்றனர்.

இதற்கிடையே மீண்டுமொரு தடவை எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுமென தகவல்கள் கசிந்துள்ளன. இது மக்களின் மீதான சுமையை அதிகரிக்கும். பண வீக்கத்தால் துவண்டு கொண்டிருக்கும் மக்களுக்கு, இந்த விலை அதிகரிப்பு பெரும் சுமையையே கொடுக்கும்.

இளைஞர், யுவதிகள் ஆர்ப்பாட்டங்களிலும் தந்தை எரிபொருள் நிரப்பும் நிலையத்திலும் தாய் இன்னுமொரு வரிசையிலும் நின்று கொண்டிருக்கின்றனர். ஆக, முழுக் குடும்பமே வீதியில் நிற்கிறது என்பதற்கு அப்பால், ஆட்சியில் இருந்தவர்களால் வீதிக்கு இழுத்து வீசப்பட்டுள்ளார்கள் என்பதே பொருத்தமானதாக இருக்கும்.

அரசாங்கத்தை தூற்றுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. வரிசைகளில் நிலவும் மரணங்களுக்கும் குறைவில்லை. பல்வேறான மன அழுத்தங்களுக்கும் பலரும் முகங்கொடுத்துள்ளனர். சுகதேகியாக இருந்தவர்களும் திடீர், திடீரென மரணித்துவிடுகின்றனர் ஏன், மரணமடைந்தார் என்பதைக்கூட கண்டறியமுடியாமல் இருக்கிறது.

இதற்கிடையே, தங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருட்களை வழங்க வேண்டுமென கோரி, சுகாதாரத் துறையினர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கின்றனர். இதனால், சுகாதார துறையும் சீர்குலைந்துள்ளது.

ஓடிக்கொண்டிருக்கும் பஸ்களும் ரயில்களும் எரிபொருள் தீர்ந்தமையால் இடைநடுவிலே நின்றுவிடுகின்றன. இதனால் பயணிகள் பரிதவிக்கின்றனர். தூர பிரதேசங்களுக்குச் சென்று, மீண்டும் கடமைக்குத் திரும்ப வேண்டியவர்கள் அச்சப்படுகின்றனர்.

எரிபொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படுமாயின் பொருட்கள், சேவைகளின் கட்டணங்கள் மீண்டும் அதிகரிக்கும். வாழ்க்கையைக் கொண்டுநடத்துவதற்கு தடுமாறிக் கொண்டிருக்கும் பலருக்கும் இந்த விலை அதிகரிப்பு வயிற்றிலடித்து விடும். அதிலிருந்து இலகுவாக மீண்டெழ முடியாத நிலைமையொன்றே ஏற்படும்.

மக்கள் பொறுமையை இழந்து நிற்கின்றனர். அவர்களிடத்தில் இனியும் பொறுமையை எதிர்பார்க்க முடியாது. இளைஞர்களின் போராட்டங்கள் வலுப்பெற்று, ஏனையோரும் அதில் கைகோர்த்துக்கொள்வார்கள் எனில், நிலைமையை சமாளிக்க முடியாத சிக்கலுக்கு மக்கள் சிக்குப்படவேண்டிய நிலைமை ஏற்படும்.

ஆகையால், காரணங்களைக் கூறிக்கொண்டிருக்காமலும் கப்பல்களுக்காக காத்திருந்து கதைகளை கூறாது, ஆக்கப்பூர்வமான தீர்மானங்களை அரசாங்கம் அதிரடியாக எடுப்பதே காலத்தின் கட்டாயமாகும்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

மேகம் கருமையாகும்; பின்னர், அதுவே ஒரு சில நேரங்கள் செல்ல, வெளித்து, வானம் நீலநிறமாகி விடும். இதுபோலவே மானிட வாழ்க்கையும்!

சில பொழுது கவலை; அடுத்து மகிழ்ச்சி, சின்னச் சின்ன அதிர்வுகள். அதுபோய்விட, நகைச்சுவை பேச்சுகள்; நண்பர்கள், உறவினர்களுடன் அரட்டை.

குடும்பங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மனநிலையில் இருப்பர். சகலருக்கும் மனம் மாறிமாறிப் புரளும். இதைக் கண்டுகொள்ளாமல் இருப்பதுவே நல்லது. மீண்டும் அவர்களே திரும்பி வருவார்கள்.

சின்னக் காரியங்களைப் பெரிதாகக் கருதலாகாது. நாங்களும் அவர்களில் ஒருவர் அல்லவா! எனவே, எவரையும் ஒதுக்குவது கூடாது.

தவறு செய்தல், கோபித்தல், ஒதுங்கி நடத்தல், கண்டபடி ஒருவரைச் சீண்டுதல், இவை எல்லாம் நடந்துகொண்டே இருக்கும்.

மிருகங்களுக்கும் உணர்வு உண்டு. ஒருகணம் ஓடிப்பிடிக்கும் சுபாவமும் மறுகணம், கத்திச் சண்டை செய்வதும் இயல்பானது. இவை உயிரினங்களின் இயல்பு.

எனவே, மனஸ்தாபப்படுவதும் பின்னர், ஒன்றிணைவதும் உயிரினங்களுக்கும் எமக்கும் உள்ள ஒற்றுமையாகும். உயிர் வாழ்வு ஒன்றேதான்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# எதிர்வுகூறி மக்களைக் குழப்பும் அரசியல்

லக்ஸ்மன்

அரசாங்கத்தின் எதிர்வு கூறல்களால் மக்கள் குழப்பமடைவதும் பீதியடைவதும் அதிகரித்து வருகிறது. இந்தக் குழப்பகரமான நிலைமைகளே நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்படுவதற்கு ஏதுக்களை உருவாக்கிவிடுகிறது.

இது பணம் இருப்பவர்கள், வசதிபடைத்தவர்கள் போன்றவர்களை மாத்திரம் உணவு உண்பதற்கும், வசதியாக வாழ்க்கை நடத்துவதற்குமான சூழலையே உருவாக்குகிறது.

அந்த வகையில் அரசாங்கத்தின் பிரதம மந்திரி, அமைச்சர்களின் கருத்துகளும் எதிர்வு கூறல்களும் வசதி படைத்தவர்களுக்கானதா என்ற சந்தேகத்தினை எழுப்புகிறது. அப்படியானால், ஏழைகளுக்கான, சாதாரண மக்களுக்கான அரசாங்கமாக இந்த அரசாங்கம் இயங்கவில்லையா என்ற கேள்வியும் இதனுடன் சேர்ந்தே எழுகிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வு, மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தி, கட்டியெழுப்புவதற்கு பல வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்படுவது தானே தவிர, அச்சத்தினையும் பீதியையும் ஏற்படுத்தும் தகவல்களை அடிக்கடி மக்களுக்கு வெளிப்படுத்துவதல்ல.

நாட்டில் இருக்கின்ற அடிமட்ட மக்களை முதன்மைப்படுத்திய செயற்திட்டங்களும் செயற்பாடுகளும் முக்கியமானதாகும். ஆனால், இப்போதும் அரசியல் பேசி மக்களை உசுப்பேற்றுகின்ற நடவடிக்கைகள் எதற்காக என்பதே கேள்வியாகும்.

அதே நேரத்தில் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி தமக்குச் சாதகமானவற்றினை நகர்த்திக் கொள்வதும் தவறே. அதற்கு குருந்தூர் மலை விவகாரம், ஒரே நாடு ஒரே சட்டம் செயலணி மற்றும் தேர்தல் முறை மாற்றங்களை உதாரணப்படுத்தலாம்.

அரசியல் பகுப்பாய்வு மற்றும் எதிர்வுகூறல் என்பது அரசியலில் செயல்முறைகள் மற்றும் நிகழ்வுகள் பயன்படுத்தப்படும் ஓர் அறிவியல் கற்கையாகும்.

வெற்றி வாய்ப்புகளை மற்றும் வாய்ப்பு நடத்தை உத்திகள் மிகவும் துல்லியமான மதிப்பீட்டை அரசியல் எதிர்வுகூறல் என்று கூற முடியும். முக்கிய பிரச்சினைகள் குறித்தும் இந்தக் கற்கையை மேற்கொள்ள முடியும்.

இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைக்கான காரணத்தினைக் கண்டறிந்து அதனைத் தர்த்து வைப்பதற்கான வழியைத் தேடுவதை விடுத்து, அரசாங்கமானது மக்களைப் பீதியடையச் செய்வது உசிதமானதல்ல. அவ்வாறான நிலைமை உருவானால் உண்மையான வறுமை, மறைமுக வறுமை என வறுமைக்குப் பல விதமான பெயர்களை உச்சரிக்க வேண்டி ஏற்படலாம்.

நமது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையென்பது, பெரும்பான்மையை நிரூபிப்பதுடனேயே முடிந்து போகின்றது. ஒரு பாராளுமன்ற உறுப்பினரை இத்தனை கோடி கொடுத்து வாங்கினார்கள்.

அவ்வாறு கோடிகளில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை கீழிறக்காதீர்கள் போன்ற தகவல்களும் பரவ விடப்படுகின்றன. இருந்தாலும் அது நடைபெறாமலில்லை. அதேநேரத்தில் பதவிகளுக்காக தம்மை அடைமானம் வைக்கின்ற நிலைகளும் காணப்படுகின்றன.

கடந்த வருடத்தில், இந்தப் பொருளாதார நிலைமை உருவாகத் தொடங்கியிருந்தாலும், இந்த வருட ஆரம்பம் கடுமையானதாக மாறியது. ராஜபக்ஷ குடும்பமே ஒட்டு மொத்தமாக வெளியேறவேண்டும் என்ற கோசம் உருவானது.

அப்போதிலிருந்து இப்போது வரைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அத்தனையும் நாட்டைப் படுபாதாளத்தில் தள்ளிவிட்டன. இதற்குள் அரசியல் வேண்டாமென்று சொன்னால் கூட அரசியலை விடுத்து எதுவுமில்லை என்ற நிலைப்பாடு இருந்து கொண்டே வருகிறது. இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

அதே நேரத்தில் நடந்து கொண்டிருப்பது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமா, கோட்டபாய அரசாங்கமா என்பது புரியாத புதிராகவே இருந்து கொண்டிருக்கிறது. ரணில் ஒருபக்கம் வெளிநாட்டுத் தூதுவர்களையும் உயர் தரப்பினரையும் சந்திக்கிறார். அதே போன்றே ஜனாதிபதியும் சந்திப்புகளை மேற்கொள்கிறார். இவை இரண்டுமே நாட்டுக்கு உதவிகளைக் கோருவதாகவே இருக்கின்றன.

'நாட்டை மீட்பார்' என்ற பெரும் நல்லெண்ணத்தில் தான் பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றர். ஆனால், இக்கட்டான நிலை ஏற்படுகிறது என்று அவர் வெளிப்படுத்துவதானது மக்களை மேலும் கிலி கொள்ளச் செய்கிறது.

அரசாங்கத்தின் பிரதிநிதிகள் வெளிப்படுத்துகின்ற தகவல்களை வெளியிடுகின்றமையால் ஊடகங்களால் தான் இந்த நிலைமை ஏற்படுகிறது என்று பலர் ஊடகங்கள் மீது கடிகின்ற நிலையும் தோன்றுகிறது.

ஆனால், ஊடகங்கள் தவிர்க்க முடியாமல் செய்கின்றன என்றாலும் மக்களுக்கு நாட்டின் உண்மை நிலைமையை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சொல்வதனால் மாத்திரம் தெரியப்படுத்துவது போதுமா என்று ஊடகங்கள் கேட்டுக்கொள்ளலாம்.

அனைத்து நடவடிக்கைகளின் ஆரம்ப நோக்கங்கள் - முடிவுகளை இடையே முரண்பாடுகள் காணப்டுவது இயற்கையே. ஆனால், ரணில் பதவியேற்றது முதல் சில அரசியல்வாதிகளும் சரி, மக்களின் ஒருசாராரும் ரணில் விக்கிரமசிங்க மஹிந்த மற்றும் கோட்டபாய போன்றோரைப் பாதுகாப்பதற்காகவே பதவியேற்றார் என்ற குற்றச்சாட்டை, அவருடைய தற்போதைய நடத்தைகள் சற்று வித்தியாசத்துடன் நோக்கவே செய்கின்றன. ஏனெனில், கூடவே இருந்து குழி பறிக்கின்ற அரசியல் குணம் சிலரிடம் ஊறிப்போயிருக்கும்.

ஒரு நாட்டைப் பொறுத்தவரையில், திட்டமிட்ட நோக்கங்கள் மற்றும் அவர்களின் செயற்பாட்டின் விளைவுகளை காலங்காலமாக அனுபவித்தேயாக வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில், வெறுமனே ஆட்சியாளர்கள் மீது மாத்திரம் பழியைச் சுமந்துகின்ற செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கையின் இந்தப் பாரதூரமான ஆபத்து நிலைக்கு, கொள்கை நிலையற்ற ஸ்திரமற்ற செயல்முறைகள்தான் காரணம் என்று பலரும் கூறிவிட்டாலும், யார் அவைகளுக்குப் பொறுப்பேற்பது? நமது நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற எதிர்வுகூறல்கள் ஆழ்ந்த அரசியல் கவிழ்ப்புக்கான தூண்டலா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது.

'அரசியலில் நண்பனும் இல்லை. பகைவனும் இல்லை' என்பதற்கு ஏதுவாக அமைந்த ரணிலில் வருகைக்குப்பின்னர், எதிர்த்தரப்பினரின் சலசலப்பு சற்றுத் தணிந்து காணப்படுகிறது.

இலங்கையை பொருளாதார இறுக்கத்தில் இருந்து மீட்பதற்கு, பாரம்பரிய அணுகுமுறைகள், நடத்தை கூட்டு, தனிப்பட்ட அனுபவம், உள்ளுணர்வு எனப் பல்வேறு ஆளுமைகள் கையாளப்படுகின்றன.

வரலாற்று ரீதியாக பார்க்கின்றபோது, வெளிப்படுத்தப்படுகின்ற நீண்ட கால மற்றும் குறுகியகால எதிர்பார்ப்புகளை எதிர்வு கூறல்கள் ஒன்று இல்லாமல் செய்யலாம். அல்லது, மேலும் வலுப்படுத்தலாம். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் வலுப்படுத்தலையே செய்துவருகிறது.

உலக நாடுகளைப் பொறுத்தவரையில் இவ்வாறான அரசியல் எதிர்வுகூறல் முறை, உண்மையில் மிகவும் தாக்கம் செலுத்துவதே வரலாறாகும். அரசியலில் உண்மையான பாதிப்பு அதன் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தியேயாக வேண்டும். ஆனால், இப்போதுள்ள நிலையில் இலங்கையில் மக்களிடம் ஒரு மாயையான, உண்மைக்குப் புறம்பான தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதே தேவையானதாகும்.

நாட்டினை மீண்டும் மக்கள் கட்டமைக்க வேண்டுமாக இருந்தால், அதற்கு நம்பிக்கை ஏற்பட்டாக வேண்டும். அந்த நம்பிக்கை உருவாவதற்கான எந்த ஒரு சூழலும் இப்போது வரை உருவானதாகத் தெரியவில்லை. அதனை யார் ஏற்படுத்துவார்கள் என்பதே சோதனையாகும்.

பல விருப்பங்களின் அடிப்படையில் தீர்க்கதரிசனமான தேர்தல் விஞ்ஞாபனங்களின் ஊடாக, ஆட்சிக் கட்டிலுக்கு வந்தவர்கள் மக்களது நலனைப் பற்றிய அக்கறையின்றிச் செயற்பட்டமையின் பாதிப்பினை தனியே ஆட்சியில் இருப்பவர்கள் மாத்திரமல்ல, நாட்டிலுள்ள அனைவரும் சுமக்க நேரிடும் என்பதற்கு இலங்கை நல்லதோர் உதாரணமாகும்.

ஆதனால்தான் எல்லோரும் கைவிட்ட நிலையில், அரசியலில் இருந்து ஒதுக்கப்பட்ட, தோற்றுப் போன, தேசிய பட்டியல் உறுப்பினரைக் கொண்ட ஐக்கிய தேசிய கட்சி இப்போது நாட்டை ஆட்சி செய்கிறது.

ஆனால், ஐ.தே.க ஆட்சி நடைபெறுகிறதா, ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன ஆட்சி செய்கிறதா என்ற கேள்விக்கு பதில் தேடுவது இப்போது முக்கியமானதல்ல.

இந்த இடத்தில்தான் அரசியல் அனுமானித்தல் என்பது முக்கியமானது. மிகவும் பொதுவான விருப்பம் ஒரு பொதுப்படுத்துதல் கணிப்பை ஏற்படுத்தும்.

இந்த ஒழுங்கில்தான் அரசியல் கணிப்பு சிந்தனை முக்கியப்படும். அந்தவகையில், அந்தக் கணிப்பைச் சரியாகச் செய்யத்தெரியாதவராக நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ஆகிப்போனார். நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற அல்லது கட்டமைக்கின்ற பணியைத் தவறவிட்டதனாலேயே இந்தப் பெயர் அவருக்கு ஏற்படுகிறது.

நாட்டில் பெற்றோல், எரிபொருளின்மை காரணமாக விலையேற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்ற சைக்கிள்களுக்கு கடன் வழங்கும் நடவடிக்கைகளை லீசிங் நிறுவனங்கள் ஆரம்பிக்கின்றன என்ற தகவல் நகைப்புக்குரியது. சைக்கிள்களுடனேயே வாழ்நாள் முழுவதையும் கழித்த நமது பெரிவர்கள் இருக்கையில், நாம் சைக்கிள்களை லீசிங் முறையில் பெற்றுக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

எரிபொருள் விலை அதிகரித்துள்ளதை அடுத்து, எரிபொருளை பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டு உள்ளதால், ஒரு சைக்கிளின் விலை 50 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. இது ஓர் ஆபத்தான நிலைமையாகும்.

## கடிதங்கள்

### முல்லைத்தீவு நகர
## குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றவும்

கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால், முல்லைத்தீவு நகரத்துக்கான குடிநீர் வழங்கல் வேலைகள் தொடங்கப்பட்டன. வற்றாப்பளை கிராம அலுவலர் பிரிவில் இருந்து, ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிநீர் வழங்குவது எனத் தெரிவித்து, இதற்கான கட்டுமானங்களும் உருவாக்கப்பட்டன.

ஆனால், ஆழ்துளைக் கிணற்றில் இருந்து குடிநீர் வழங்குவதன் மூலம், வற்றாப்பளை, நீராவிப்பிட்டி உட்பட பல கிராமங்களில் நிலத்தடி நீர் நெருக்கடி உருவாகும் என எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன. ஆழ்துளைக் கிணற்றுக்கப் பதிலாக இயற்கை ஊற்றுகள், குளங்களை நீர் மூலமாகக் கொண்டு, முல்லைத்தீவு நகரத்திற்கு நீர் வழங்கலாம் என்ற யோசனைகள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைபற்று பிரதேச செயலகம், கரைதுறைபற்று பிரதேச சபை கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டன.

முல்லைத்தீவு நகர குடிநீர்த் திட்டத்துக்கென அமைக்கப்பட்ட குழிகளால் போக்குவரத்துக்கு பாதிப்புகள் ஏற்படுகின்றன; விபத்துகள் இடம் பெறுகின்றன. ஆனால், பத்தாண்டுகள் கடந்தும் முல்லைத்தீவு நகரத்துக்கான குடிநீர் விநியோகம் நடைபெறவில்லை.

தற்போது முல்லைத்தீவு நகர மக்கள், குடிநீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். குடிநீரைத் தேடி, மக்கள் செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது. எனவே, இது குறித்து உரியதரப்பினர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

– நடராசா கிருஸ்ணகுமார்

## வாழ்வாங்கு வாழ வைக்கும் யோகா

# நிம்மதிக்கு வழி





வி.ரி சகாதேவராஜா

இயற்கை எப்போதுமே அமைதியானது. ஆனால், உலகில் இயற்கையை குழப்பும் செயற்பாடுகளிலேயே மனிதன் ஈடுபட்டு கொண்டிருக்கின்றான். அதனால், நிம்மதி இல்லை; அனர்த்தங்கள் சூழ்கின்றன. நிம்மதியாக வாழ்வதற்கு உடல், உள வலிமை அவசியம். அதனை வழங்கி, நோயற்ற வாழ்க்கைக்கு இட்டுச் செல்வது யோகாசனம் ஆகும். இந்து மதத்தின் தனித்துவமான அம்சமாக யோகாசனம், உலகில் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த யோகாசனத்துக்கான சர்வதேச தினம் கடந்த 21ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது, கல்முனையிலும் காரைதீவிலும் சர்வதேச யோகா தினம், மிகவும் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

காரைதீவு லட்சுமி அம்பாள் மண்டபத்தில் அம்பாறை மாவட்ட இந்து ஸ்வயம் சிவசங்கர் பொறுப்பாளர் இரா. குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

காரைதீவில் நடைபெற்ற சர்வதேச யோகா தினத்தில் கலந்து கொண்ட இந்து ஸ்வயம் சேவக சங்க பாண்டிருப்பு பொறுப்பாளர் பி.ஆர் தர்மராஜா, அங்கு உரையாற்றுகையில் பின்வருமாறு கூறியிருந்தார்.

“பணத்தை மையமாக வைத்து, பொருளாதார ரீதியில் அபிவிருத்தியைக் காண மனிதன் முற்பட்டான். அதனால், மனித குலம் சீரழிந்து கொண்டிருக்கிறது. மனித மனத்தைப் பற்றிச் சிந்திக்கத் தவறி விட்டான். வெளிநாடுகளில் இயந்திரத்தை மையமாக வைத்து ஆராய்ச்சி செய்ய, கீழைத்தேய நாடுகளில் மனிதனுடைய மனதில் நுழைந்து ஆராய்ச்சி செய்ய முற்பட்டது. மனிதனுக்கு சாந்தித்தியம் தேவை. சாந்தித்யமில்லாத இடத்து அவரோ சமூகமோ நிம்மதியாக நிலையாக வாழ முடியாது. மனிதகுலம் இன்று அமைதியை இழந்து நிற்கிறது. இந்து தர்மம் தனக்கென்று கண்டு பிடித்த தத்துவங்கள், மார்க்கங்களை எல்லாம் உலகம் ஈர்ந்து வருகின்றது. அதனால், இந்து சமூகத்தின் பால் வெள்ளைக்காரர்களும் ஈர்க்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள். உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்தும் ஒருவர் தான், உலகை வெல்கிறார்; அவரால் தான் உலகம் பயன்பெறுகின்றது. மூடநம்பிக்கையும் மதவெறியும் உலகை அழித்துவிடும் என்று கூறுகின்றார் பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சர்.



“உடலை வலிமையாக்குவது யோகாசனம்; மனதை வலிமையாக்குவது தியானம். ‘உடல் இரும்பு போன்ற வலிமை உடையதாக இருக்க வேண்டும்’ என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். அந்தக் காலத்தில் சித்தர்கள் இந்த மனதைத் தேடி அலைந்தார்கள். அவர்களுக்குள்ளேயே அந்த நிம்மதி தேடி வந்தது.

“யோகாவையும் தியானத்தையும் ஒருங்கே செய்யும் பொழுது, எங்களை நாங்களே கட்டுப்படுத்திக் கொள்ளலாம். அது மாத்திரமல்ல, நோயற்ற வாழ்க்கைக்கு அது இட்டுச் செல்லும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இன்று மனிதன் ஒழுங்கற்ற வாழ்க்கை முறை, ஒழுங்கற்ற உணவு முறை, ஒழுங்கான நேர முகாமைத்துவம் இல்லாமல் தனது வாழ்க்கையை சீரழித்து வருகின்றான். அதன் பலனாகவே நிம்மதி இழந்து தவிக்கின்றான். ஆகவே, அதிலிருந்து நாங்கள் விடுபட வேண்டுமாக இருந்தால், யோகாவையும் தியானத்தையும் செய்து சிறப்புற வாழ வேண்டும்” என்றார்.

நிகழ்வில், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். அக்கரைப்பற்று, பாண்டிருப்பு, கல்முனை போன்ற பகுதிகளிலிருந்து மாணவர்களும் பெரியோர்களும் வருகை தந்திருந்தார்கள்.

இதேவேளை, சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தால், யோகா தின நிகழ்வு செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றது.

கல்முனை உவெஸ்லி உயர்தர தேசிய பாடசாலை மைதானத்தில், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தா (இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு) முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

“இந்துமதம் உலகத்துக்கு அளித்த பெரும் பொக்கிஷம் யோகா. மனதை கட்டுப்படுத்தவும் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் யோகா மிக மிக அவசியமாகின்றது. யோகா செய்தவன் உலகை வெல்வான்” என்று அம்பாறை மாவட்ட





அரசாங்க அதிபர் ஜெ. எம் டக்ளஸ் இங்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தெரிவித்தார்.

இராம கிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில தலைவர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த மகராஜ் ஆசியுரை ஆற்றுகையில், “மனதை கட்டுப்படுத்துவதற்கு யோகாசனம் மிகவும் பயனுள்ளது. யோகாவைப் பயின்றவர்கள் மனதைக் கட்டுப்படுத்தி, உலகையே வெல்வார் என்றால் மிகையல்ல. அறநெறி மாணவர்கள் சிறுவயதிலிருந்தே யோகாவை பயின்று கொண்டால், வாழ்க்கையில் சிறக்கும். ஆரோக்கியமாக நிம்மதியாக வாழ்வதற்கு இது உதவும்” என்றார்.

இந்நிகழ்வுக்கு அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தட்ஷஜானந்த மகராஜ், கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே. ஜெகதீசன், சிறப்பு அதிதிகளாக நாவிதன்வெளி பிரதேச செயலாளர் சோ. ரங்கநாதன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி. பபாகரன், நாவிதன்வெளி உதவி பிரதேச செயலாளர் பே. பிரணபரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜ் ஏற்பாடுகளை மேற்கொண்டார். யோகாசன பயிற்சிகளை யோகாச்சாரியார் கா. சந்திரலிங்கம் வழங்கியிருந்தார். பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பல நூற்றுக்கணக்கானோர் யோகாசனப் பயிற்சியில் பங்குபற்றியிருந்தனர்.







# திருகோணமலையும் கடலோர சுற்றுச்சூழலும்..!





அ. அச்சுதன்

திருகோணமலை தன்னகத்தே அழகிய ஓர் இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டது மட்டுமன்றி, இராணுவ, வணிக மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வனப்புமிக நகரமாக, இலங்கையின் கிழக்குக் கரையில் அமையப் பெற்றுள்ளது.

திருகோணமலை மாவட்டமானது, வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தையும் மேற்கில் அநுராதபுர மாவட்டத்தையும் தெற்கே பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களையும் தனது தரை எல்லைகளாகவும் சுமார் 130 மைல் நீளமுள்ள கடற்கரையையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

திருகோணமலை துறைமுகம் 50 கி.மீ தூரம் நீளமானதுடன், பாதுகாப்பாகத் தரித்துநிற்கக் கூடிய வகையில் அமைந்த, உலகில் சிறந்த துறைமுகங்களில் ஒன்றாகவும் திகழ்கின்றது. இந்தத் துறைமுகம் மூன்று பக்கங்களிலும் மலைகள், குன்றுகளால் சூழப்பட்டுள்ளதுடன் நாலாபக்கம் சில தீவுகளால் பாதுகாக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தின் வடக்குப் பகுதியான திருகோணமலை மாவட்டத்தின் மொத்தப்பரப்பு 2,727 சதுர கி.மீ ஆகும். இதில் உள்நாட்டு நீர்ப்பரப்பளவு 147.3 சதுர கி.மீ ஆகும். இந்த மாவட்டம் முக்கியமான ஒரு சமவெளியைக் கொண்டுள்ளது. மேலும், 10 விரிகுடாக்கள், 15 வாவிகளை உருவாக்கும் விசித்திரமான நிலப்பரப்பைக் கொண்டது.

‘இயற்கையைப் பாதுகாக்க வேண்டும்’, ‘சுற்றுப் புறச்சூழலை பேணவேண்டும்’ என்ற விழிப்புணர்வை மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு, ஒவ்வொரு வருடமும் ஜூன் எட்டாம் திகதி உலக சமுத்திர தினம் கொண்டாடப்படுகின்றது.

உலக சமுத்திர தினம் மற்றும் உலக சுற்றுச் சூழல் தின வாரத்தை முன்னிட்டு, கடற்கரைப் பகுதிகளில் கழிவுகளை அகற்றும் பிரதான நிகழ்வு இம் முறை திருகோணமலையில் உட்துறைமுக வீதி கடற்கரையில் புதன்கிழமை (08.06.2022) ஆரம்பமாகியது.

கடலோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சிறிபதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு இளைஞர் அபிவிருத்தி அகம், ‘வி. எபெக்ற்’ அமைப்பு என்பன பிரதான அனுசரணை வழங்கின. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்.என். ஜயவிக்கிரம, ‘வி.எபெக்ற்’ நிறுவன இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி த. மயூரன், மேலதிக மாவட்ட செயலாளர்களான ஜே. அருள்ராஜ், ச. சுதாகரன், மாவட்ட செயலக கணக்காளர் அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர், துறைசார் அதிகாரிகள், திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரிவு பிரதேச செயலாளர் பொ. தனேஸ்வரன் கடற்படை அதிகாரிகள், இளைஞர் அபிவிருத்தி அகத்தின் இணைப்பாளர் பொ. சற்சிவானந்தம், திட்ட முகாமையாளர் த. திலீப்குமார் உள்ளிட்ட நூற்றுக்கணக்கிலானோர் பங்குகொண்டு உட்துறைமுக வீதி கடலோரங்களில் காணப்பட்ட பொலித்தீன், பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுத்தனர்.

கடலோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின்





பணிப்பாளர் சிறிபதி கருத்து தெரிவிக்கையில், “எங்களுடைய வாழ்வாதார தொழிற்பாடுகள், அபிவிருத்தி தொழிற்பாடுகள் காரணமாக, ஒவ்வொரு நாளும் எங்களுடைய சமுத்திர சூழல் அழிந்து கொண்டு போகின்றது. குறிப்பாக பொலித்தீன், பிளாஸ்டிக் பொருட்களை கடலில் போடும் நாடுகளில், இலங்கை ஐந்தாது இடத்தில் இருக்கின்றது. அதேபோல் சில ஆராய்ச்சிகள் சொல்கின்றன, 2050ஆம் ஆண்டு வரும் போது, கடலில் காணப்படுகின்ற உயிர் அங்கிகளை விட பொலித்தீன், பிலாஸ்டிக் பொருட்கள் கூடுதலாக காணப்படும் என்று. உண்மையில் நாங்கள் எவ்வாறு எங்களுடைய சுற்றாடலை அசுத்தப்படுத்துகின்றேம் அறியக்கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் எங்களுடைய மக்களின் சிந்தனைகளை மாற்றி எங்களுடைய சூழலை பாதுகாக்க அனைவரும் ஒன்றினைய வேண்டும்” என்றார்.

இதேவேளை, திருகோணமலை கடற்கரையைச் சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்று, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தலைமையில் 18-06-2022 அன்று காலையில் இடம்பெற்றது. இதன்போது கரையோர பாதுகாப்புத் திணைக்களம், திருகோணமலை நகர சபை, பசுமை வனம் அமைப்பினரும் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் பொலித்தீன், பிளாஸ்டிக் பொருட்களின் பாவனை அதிகமாக காணப்படுகின்றது. கழிவுப் பொருட்களை அகற்றுவதில் கூட இன்னும் ஒழுங்கான நவீன முறைகளை நகர சபையோ, பிரதேச சபைகளோ பின் பற்றுவதாக தெரியவில்லை.







இதனால் கூடுதலான பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவுப் பொருட்கள் கடற்கரை ஓரங்களில், கழிமுகங்களில், ஆறுகளில் வீசப்படுகின்றன. இதனால் சுற்றுச்சூழல் மாசடைகின்றது. கடல்வாழ் உயிரினங்கள் பாதிப்படைகின்றன.

எனவே மாவட்டத்தின் கடல் வளத்தையும் சுற்றுச் சூழலையும் அதன் அழகையும், பாதுகாக்க ஒவ்வொரு நாளும் நடவடிக்கைகளை எடுப்பது மிக அவசியமாகும்; ஒவ்வொருவருடைய பொறுப்பும் கடமையும் என்பதையும் மனதிலிருத்திக் கொள்ள வேண்டும்.





# ஹட்டனில் இரு நூல்கள் வெளியீடு

இரு நூல்களின் வெளியீடும் அறிமுகமும் ஹட்டனில் ஞாயிற்றுக்கிழமை (26) காலை நடைபெறவுள்ளது.


எல். ஜோதிகுமாரின் 'பிளம்ஸ் மரங்களும் சடை சவுக்குகளும்' மற்றும் ஜெயமோகனின் 'வெள்ளை யானை' ஆகிய இரு நூல்களின் வெளியிடே நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு சிரேஷ்ட சட்டத்தரணி டி.சச்சிதானந்தன் தலைமையில், ஹட்டன் நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விரு நூல்களின் அறிமுத்தையும் கருத்துகளையும் 'சாகித்திய ரத்னா' மு. சிவலிங்கம், சிவம் சிவபிரகாசம், எம். ஜேம்ஸ் விக்டர், சு. தவச்செல்வன், எம். இளையராஜா, செல்வி. பாலேந்திரன் பிரதாரணி ஆகியோரும் நூல்களின் ஏற்புரையை எல்.ஜோதிகுமாரும் வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் பங்குபற்றும் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஆ. ரமேஸ்




# 'கற்பின் கானம்' வெளியீட்டு விழா

மட்டக்களப்பு, செட்டிபாளையம் ஸ்ரீ கண்ணகை அம்மன் புகழ் பாடும் 'கற்பின் கானம்' எட்டுப் பாடல்கள் வெளியீட்டு விழா, ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில் முன்றலில் நடைபெற்றது.

இசை இளவரசர் அருணாகேதீசின் இசையமைப்பில், மட்டக்களப்பு கலைஞர்களின் பங்கேற்புடன் உருவாகியுள்ள 'கற்பின் கானம்' வெளியீட்டு நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.


ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையின் தலைவர் கீ. லோகராஜா தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவுக்கு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெட்ணம், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் இசைத்துறை தலைவி கலாநிதி நிர்மலேஸ்வரன் பிரசாந்த் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.

இசை இளவரசர் அருணாகேதீசின் இசையமைப்பில், கவிஞர் ஜீ. எழில்வண்ணன், கவிஞர் க. தருமரெத்தினம், கவிஞர் மா. திருநாவுக்கரசு, வேதநாயகி குணநாதன், கவிஞர் அ. கிருபானந்தம், கவிஞர் க. மோகனதாசன், மகாலிங்கம் தயாபரன், கந்தப்பு ஜெயரூபன், சந்திரசோதி பானு, கில்மிஷா உதயசீலன், நாதகானமணி கே.என். மதுசுதனன் ஆகியோரின் கூட்டு முயற்சியால், 'கற்பின் கானம்' பூரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.







(படங்களும் தகவலும்: எம்.எஸ்.எம் நூர்தீன்)

# மல்லாகத்தில் புத்தக அரங்க விழா







தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தலைப்பில் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறுகின்ற புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாளான இன்று சனிக்கிழமை (25) ஈழத்து இலக்கியங்களை அறிவோம் - நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் அண்மையில் காலமான எழுத்தாளரும் ஆசிரியருமான மயிலங்கூடலூர் பி. நடராஜன் (ஆடலிறை) நினைவாக நடைபெறவுள்ளது.

ஆசிரியரும் ஆய்வாளருமான சி. ரமேஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் அரங்கில், நூல்களின் அறிமுக உரைகளை ஆசி கந்தராஜாவின் 'பணச்சடங்கு' சிறுகதைத் தொகுப்பு தொடர்பாக எழுத்தாளரும் கட்டடக் கலைஞருமான இ. மயூரநாதனும் கலாநிதி சு. குணேஸ்வரனால் தொகுக்கப்பட்ட தேவகாந்தனின் தேர்ந்த கதைகளின் தொகுப்பான 'பின்னல் பையன்' நூல் தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் தி. செல்வமனோகரனும் அருட்தந்தை ஜோசுவாவின் 'பாதி உயிர் கருப்பன்சாமி கதை' நூல் தொடர்பாக ஆசிரிய ஆலோசகரும் எழுத்தாளருமான பா. மகாலிங்கசிவமும் ஆற்றவுள்ளனர். நிகழ்ச்சித் தொகுப்பினை விவாதியான இ. கார்த்தியாயினி மேற்கொள்வார்.

தொடர்ந்து மாலை 6.30 மணியளவில் சண் நாடகக் குழுவினரின் 'அங்கிடுதத்தி', 'என்னவென்று சொல்வேனடி' ஆகிய நகைச்சுவை நாடகங்கள் அரங்கேற உள்ளன.

இப் புத்தக அரங்க விழாவையொட்டி குறித்த சனி (25), ஞாயிறு (26) கிழமைகளில் காலை 8.30 தொடக்கம் மாலை 5 மணி வரையும் புத்தகப் பண்பாட்டுப் பேரவையினரின் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் நடைபெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சபா தனுஜன்



# 'எழுக தமிழ்' நூல் வெளியீட்டு விழா

கிளிநொச்சி, முரசுமோட்டை பழைய கமத்தைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா சிவசுப்பிரமணியம் (முரசு மோட்டை கஜா) எழுதிய 'எழுக தமிழ்' நூல் வெளியீட்டு விழா, முழுமதி தினத்தன்று (14) முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி மண்டபத்தில், கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி இராஜேந்திரம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில், கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஓய்வுநிலை அதிபரும் கோட்டக்கல்வி அதிகாரியுமான நா. சோதிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூலின் முதல் பிரதியை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து, சிறப்பு பிரதிகளை ஓய்வுநிலை கோட்டக்கல்வி அதிகாரி வீ. இராஜகுலசிங்கம், முருகானந்தா ஆரம்ப வித்தியால முதல்வர் க. கருணானந்தன் ஆகியோர் வெளியிட்டு வைத்தனர்.

இன்றைய இளம் சமூகத்தில் அருகிவருகின்ற வாசிப்பு பழக்கம், மற்றவர்களை மதிக்காத தன்மை என்பன உட்பட, பல்வேறு சமூக விரோத செயற்பாடுகள் நீள்கின்ற நிலையில், சமூகத்தை நல்வழிப்படுத்தும் வகையிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இந்நூல் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நூலுக்கான மதிப்பீட்டுரையை ஆசிரியரும் கவிஞருமான செந்தூரன் நிகழ்த்தினார். நூல் வெளியீட்டின் போது கிடைக்கப் பெற்ற அன்பளிப்பு நிதியை, முருகானந்தா கல்லூரி வளாகத்தில் திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

(படங்களும் தகவலும்: சுப்பிரமணியம் பாஸ்கரன்)












# 'திட்டமிடல் நுட்பங்கள்'









மூதூரைச் சேர்ந்த திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். பாயீஸ் ஸலாம் எழுதிய 'திட்டமிடல் நுட்பங்கள்' எனும் நூல் வெளியீட்டு விழா மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (20) வெளியீட்டு வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம் முபாறக், சிறப்பு அதிதியாக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பி. அரபாத் ஆகியோர் கலந்துகொண்டனர். நூலின் முதல் பிரதியை நூலாசிரியரிடமிருந்து மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாறக் பெற்றுக்கொண்டார்.

இந்நூல், திட்டமிடல் சேவை அபிவிருத்தி உத்தித்தோகத்தர் சேவை உள்ளிட்ட சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உதவும் விதமாக எழுதப்பட்டுள்ளது.

(படங்களும் தகவலும்: எஸ்.எல். நௌபர் )

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 25 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.